# மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் - ஜூலை 01 – 31, 2024



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 11 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 12 |
| 4 | திட்டங்கள் | 18 |
| 5 | நீதிமன்ற தீர்ப்புகள் | 22 |
| 6 | சர்வதேச நிகழ்வுகள் | 23 |
| 7 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 25 |
| 8 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 28 |
| 9 | குழுக்கள் | 31 |
| 10 | பாதுகாப்பு | 33 |
| 11 | பொருளாதாரம் | 37 |
| 12 | நியமனங்கள் | 40 |
| 14 | விருதுகள் | 41 |
| 15 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 50 |
| 16 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 52 |
| 17 | விளையாட்டுகள் | 57 |
| 18 | அறிக்கைகள் | 62 |
| 19 | தரவரிசைப் பட்டியல் | 65 |
| 20 | முக்கிய தினங்கள் | 66 |
| 21 | குழு 1 – முதல் நிலை – 2024 13.07.2024 | 70 |
| 22 | TNMAWS – நகராட்சி நிர்வாகம் மற்றும் நீழ்வழங்கல் துறை – 29.06.2024 | 78 |
| 23 | நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை (TNMAWS) - பட்டயம் (டிப்ளமோ) தரநிலை | 82 |


# தமிழ்நாடு

- **சட்ட விரோத மதுபானக் குற்றங்களுக்கான தண்டனைக் காலம் மற்றும் அபராதங்களை அதிகரிப்பதற்கான மசோதாவை தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றியது.**



- ✓ தடை செய்யப்பட்ட மதுபானம் மற்றும் மெத்தனால் போன்ற குற்றங்களுக்கு தண்டனையை கடுமையாக ஆக்கும் மசோதாவை தமிழ்நாடு சட்ட மன்றம் ஏற்றுக் கொண்டது.
- ✓ தடை செய்யப்பட்ட மதுபானம் தொடர்பான குற்றங்களுக்கு, குறிப்பாக நுகர்வு காரணமாக மரணம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கடுமையான தண்டனைகளை விதிக்க, தமிழ்நாடு மது விலக்குச் சட்டம்,1937ஐ திருத்துவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **நான் முதல்வன் திட்டம் - 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும்**
- ✓ மாநில அரசின் நான் முதல்வன் திட்டத்தின்மூலம், ஜூன் 18, 2024 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 25,888 மாணவர்கள் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.



THE HINDU

**Over 25,000 polytechnic students get jobs through *Naan Mudhalvan* scheme**

Helping hand

- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் இலாபகரமான வேலைகளைப் பெறுவதற்கு அரசாங்கம் உதவுகிறது.
- ✓ இதுவரை 252 கல்லூரிகள் வேலைவாய்ப்பு இயக்கத்தில் கலந்து கொண்டுள்ளன. வேலைவாய்ப்புகள் இன்னமும் நடைபெற்று வருவதாகவும், சுமார் 58.000 மாணவர்கள் தங்கள் கல்வியின் இறுதி ஆண்டில் படித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

➢ **தமிழ்நாடு அரசு வரைவு விண்வெளி தொழில் கொள்கை 2024ஐ வெளியிட்டுள்ளது**

✓ 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 10,000 நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும், ஊக்கத் தொகை வழங்குவதை உறுதியளிப்பதையும் நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு வரைவு விண்வெளித் தொழில் கொள்கை 2024 ஐ தமிழ்நாடு அரசு வெளியிட்டது.



✓ இந்த வரைவுக் கொள்கை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் (TIDCO) இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்வெளித் துறை தொடர்பான உற்பத்தி மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.

➢ **அரசு உதவி பெறும் பள்ளிகள் அரசுப் பள்ளிகளுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும்**

✓ ஒரு கல்வியாண்டின் ஜூலை 31ஆம் தேதியன்று "ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பிறகே' அனைத்து கல்வி நிறுவனங்களிலும் குழந்தைகள் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டு, முறையான பள்ளிக் கல்வி தொடங்கப்பட வேண்டும் என்று நீதியரசர் டி. முருகேசன் குழுவால் உருவாக்கப்பட்ட மாநிலக் கல்விக் கொள்கை தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.





✓ மாணவர்கள் பத்தாம் வகுப்பில் வாரியத் தேர்வுகளை எதிர்கொள்வதற்கு முன்பாக, மையப்படுத்தப்பட்ட தேர்வு எதையும் நடத்தக்கூடாது என்றும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

✓ பள்ளிக் கல்வியின் நிலைகளை முறையே 5+3+2+2 என்று புரிந்து கொள்ள வேண்டும். அவை முறையே தொடக்க நிலை, மேல் தொடக்க நிலை, இரண்டாம் நிலை மற்றும் மேல்நிலை எனப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

➢ **அரசின் இரண்டு திட்டங்களின் விரிவாக்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அழைப்பு விடுத்தார்**

✓ தருமபுரியில் வரும் ஜூலை 11ஆம் தேதி 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தை விரிவுபடுத்தும் விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொள்கிறார்..




✓ மேலும், முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில், திருவள்ளூரில் ஜூலை 15ஆம் தேதி நடைபெறும் மற்றொரு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்க உள்ளார்.

✓ அரசு நடத்தும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், முதல்வரின் காலை உணவுத் திட்டம் செப்டம்பர் 2022இல் தொடங்கப்பட்டது. ஊட்டச்சத்தை மேம்படுத்த உதவும் இந்தத் திட்டத்தின்மூலம் சுமார் 14.40 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

✓ இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் கிராமப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

➢ **TANGEDCO இன் பெயர் மாற்றம்**


✓ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (Tamil Nadu Generation and Distribution Corporation -TANGEDCO) தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட் (Tamil Nadu Power Distribution Corporation Limited -TNPDCL) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.




- ✓ மாநிலத்தில் பல்வேறு வகைகளில் சுமார் 3.37 கோடி நுகர்வோர் உள்ளனர்.
- ✓ 2023-24ஆம் ஆண்டில் 8.11 இலட்சம் புதிய சேவை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- ✓ தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம் லிமிடெட் (Tamil Nadu Green Energy Corporation Limited -TNGECL) புதை படிவ எரிபொருள் தொடர்பான (நிலக்கரி, நாப்தா மற்றும் எரிவாய) உற்பத்தியை மேற்கொள்ள உள்ளது.
- ✓ தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் லிமிடெட் (Tamil Nadu Green Energy Corporation Limited - TNGECL) நீர், காற்று மற்றும் சூரிய உற்பத்தியைக் கையாளும்.

➢ **பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாள்**

- ✓ பெருந்தலைவர் காமராஜரின் 122வது பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. காமராஜருக்கு தமிழக அரசு சார்பில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அஞ்சலி செலுத்தினர்.




- ✓ காமராஜரின் பிறந்த நாள் பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது.
- ✓ பெருந்தலைவர் காமராஜர் 15.07.1903 அன்று பிறந்தார்.
- ✓ தனது அயராத உழைப்பால் ஆட்சியின் உச்சத்தைத் தொட்ட கர்மவீரர் காமரா4ர் தனது 9 ஆண்டு கால ஆட்சியில் ஒவ்வொரு கிராமத்திலும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி, கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

## ➢ உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மாநகரில் பேரணி நடைபெற்றது

- ✓ தமிழ்நாட்டில் சிசு இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு 13 ஆகவும், தாய் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு 45.6 ஆகவும் உள்ளது என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சனிக்கிழமை அன்று தெரிவித்தார்.
- ✓ உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், நாட்டின் சிசு இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு 28 என்றும், தாய் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு 97 என்றும் அவர் கூறினார்.
- ✓ தமிழ்நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 7.7 விழுக்காடு என்று அவர் ஒரு செய்திக் குறிப்பில் தெரிவித்தார். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பேரணி நடத்தப்பட்டு உறுதி மொழி எடுக்கப்பட்டது.

## ➢ 13 நிலையான வளர்ச்சி இலக்குகளில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது

- ✓ ஒன்றிய அரசின் சிந்தனைக் குழுவான நிதி ஆயோக் வெளியிட்ட சமீபத்திய நிலையான வளர்ச்சி இலக்கு இந்தியா குறியீடு 2023-24இன்படி, ஐக்கிய நாடுகள் சபையின் 13 நிலையான வளர்ச்சி இலக்குகளில் தமிழ்நாடு ‘முன்னோடியாக’ வகைப்படுத்தப்பட்டுள்ளது.




- ✓ இந்த அறிக்கையின்படி, தேசிய சராசரியான 71 ஐத் தாண்டி, தமிழ்நாடு 78 என்ற கூட்டு மதிப்பெண்களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ✓ ஆற்றலில் சாதனை படைத்த நமது மாநிலம், சமீபத்திய அறிக்கையில் 13 நிலையான வளர்ச்சி இலக்குகளின் முன்னணியில் உள்ளது.
- ✓ மலிவான மற்றும் தூய்மையான எரிசக்தி இலக்கை நிறைவேற்றுவதற்கான சாதனையாளர் பிரிவில் இது தொடர்ந்து இடம் பிடித்து வருகிறது.
- ✓ இந்த அறிக்கையின்படி, மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில், வறுமையை ஒழிக்கும் இலக்கில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

## ➢ புதிய இந்திய இலக்கியத் திட்டம் அல்லது புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்

- ✓ தமிழகம் முழுவதும் 15 வயதுக்கு மேற்பட்ட கல்வியறிவற்ற 6 இலட்சத்திற்கும் அதிகமானோரை பள்ளிக்கல்வித் துறை கண்டறிந்து, அவர்களுக்கு புதிய இந்திய இலக்கியத் திட்டம் அல்லது புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-27ன்கீழ் இந்த ஆண்டு அடிப்படை கல்வியறிவு வழங்குவதற்கான வகுப்புகளைத் தொடங்கியுள்ளது.




- ✓ அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கல்வியறிவு இல்லாதவர்கள் (61,622) உள்ளனர்.
- ✓ இந்த ஐந்தாண்டுத் திட்டத்தால் மாநிலம் முழுவதும் 30 இலட்சம் பேர் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ 'இல்லம் தேடி கல்வி' மற்றும் பிற திட்டங்களின் தன்னார்வலர்களின் உதவியுடன் இதுவரை 6,07,771 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

➢ **தமிழ்நாடு கிராமப்புற இன்குபேட்டர் மற்றும் புத்தொழில் செயல்பாட்டாளர் (TN-RISE) முயற்சி**

- ✓ ஆகஸ்ட் 2024 முதல், தமிழ்நாடு முழுவதும் பெண் தொழில் முனைவோர் தலைமையில் சுமார் 130 நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாடு கிராமப்புற இன்குபேட்டர் மற்றும் புத்தொழில் செயல்பாட்டாளர் (Tamil Nadu Rural Incubator and Start-up Enabler) திட்டத்தின்கீழ் வழிகாட்டியாக விளங்கும்.

- ✓ "இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை, நாங்கள் 31 மாவட்ட தொடக்க முகாம்களை நடத்தி, சுமார் 2500 நிறுவனங்களை ஈர்த்தோம்".
- ✓ தமிழ்நாடு கிராமப்புற இன்குபேட்டர் மற்றும் புத்தொழில் செயல்பாட்டாளர் ஆனது, வழிகாட்டுதலை வழங்கி, தமிழ்நாடு கிராமப்புற மாற்றத் திட்டத்தின்கீழ் (Tamil Nadu Rural Transformation Project) ஒரு சிறப்பு நோக்கத்திற்கான வாகனமாக செயல்படுகிறது. அத்துடன், வழிகாட்டுதல் நிதி ஆதரவை வழங்கி வளர்ந்து வரும் நிறுவனங்களை ஆதரிக்கிறது.

- **கட்டிட அனுமதி பெறுவதற்கான ஒற்றைச் சாளர அமைப்பு**
- 2500 சதுர அடி வரையிலான மனைப்பரப்பு மற்றும் 3500 ச.அடி பரப்பளவு கட்டப்படும் பரப்பளவைக் கொண்ட குடியிருப்புகளுக்கு சுய சான்றின் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கும் ஒற்றைச் சாளர அமைப்பை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திங்கட்கிழமை தொடங்கி வைத்தார்.



**Stalin launches single-window system that simplifies process of getting building permission**

Permission for plots measuring up to 2,500 sq.ft. and having a built-up area of up to 3,500 sq.ft. can be obtained based on self-certification. It applies to buildings with a ground or ground and 1 floor

The Hindu Bureau
CHENNAI

Chief Minister M.K. Stalin on Monday launched a single-window system through which building permissions for plots measuring up to 2,500 sq.ft. and having a built up area of up to 3,500 sq.ft. could be obtained based on self-certification. This would apply to the construction of residential buildings with a ground or ground and one floor (not exceeding seven

**Streamlined approval:** Chief Minister M.K. Stalin handing over building permissions to applicants at the Secretariat on Monday.

through the single window system. On making the re-

construction work, a press release said.

dule, integrated into the single window system, would be introduced to facilitate the sanctioning of building permissions based on self-certification, without the requirement of a completion certificate. "Plots of up to 2,500 sq.ft. in size and a built-up area of up to 3,500 sq.ft. for the construction of residential structures having a ground or ground plus one floor will be eligible for instant registration without the requirements of building permission," he had said.

- ஒரு தளம் அல்லது தரை மற்றும் ஒரு தளம் (ஏழு மீட்டர் அளவுக்கு மிகாமல் உயரம் கொண்ட) குடியிருப்பு கட்டிடங்களின் கட்டுமானத்திற்கு இது பொருந்தும்.


- **மாஞ்சோலைத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசின் உதவித் தொகுப்பு**
- இந்த அறிக்கையின்படி, அவர்கள் ஓய்வு பெறுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்ததால் 25 விழுக்காடு கருணைத் தொகையையும் பெற்றுள்ளனர் என்று தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



- ‘‘தொழிலாளர்களுக்கு விதிகளின்படி நிலுவையில் உள்ள கருணைத் தொகையின் 75 விழுக்காடு, மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் அனைத்து சட்டப்பூர்வ உரிமைகளையும் பெற தொழிலாளர் நலத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.’’
- இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, மாநில அரசு விதிமுறைகளைத் தளர்த்தி, இலவச வீட்டு மனைப் பட்டாவை வழங்கும். வீடற்ற தொழிலாளர்களுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகளும் கட்டித் தரப்படும்.

- **தமிழ்நாட்டில் தாய்மார்கள் இறப்பு விகிதம் 2023-24இல் 45.5 ஆகக் குறைந்துள்ளது.**

- ✓ சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (Health Management Information System) தரவுகளின்படி, 2023-24இல் தமிழ்நாட்டில் பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்பு விகிதம் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது ஆறு புள்ளிகளுக்கு மேல் குறைந்து ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 45.5 விழுக்காடு என்ற அளவை எட்டியுள்ளது.



T.N's MMR drops to 45.5 in 2023-24

- ✓ உண்மையில், இதே கால கட்டத்தில், விருதுநகர் சுகாதாரப் பிரிவு மாவட்டத்தில் மகப்பேறு இறப்புகள் பூஜ்ஜியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். சுகாதார மேலாண்மைத் தகவல் அமைப்பு தரவுகளின்படி, 2022-23இல் பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்ப விகிதம் 52.2 ஆக இருந்தது, 2023-24 ஆம் ஆண்டில் 45.5 ஆகக் குறைந்துள்ளது. இந்தத் தாய்மார்கள் இறப்பு விகிதம் கோவிட் 19 பெருந்தொற்றின்போது, அதிகமாக இருந்தது.

APP STUDY CENTRE

# மாநிலங்கள்

- **கேரளாவின் விழிஞ்சம் சர்வதேச துறைமுகம்**
- ✓ கேரளாவின் விழிஞ்சம் சர்வதேச துறைமுகத்தில் முதல் மதர்ஷிப் கப்பல்துறை




- ✓ சீனாவைச் சேர்ந்த 'சான் பெர்னாண்டோ' என்ற கப்பலே விழிஞ்சம் சர்வதேச கடல் துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட முதல் கொள்கலன் கப்பல் ஆகும்.
- ✓ கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள விழிஞ்சம் சர்வதேச துறைமுகம் இந்தியாவின் முதல் ஆழ்கடல் கொள்கலன் டிரான்ஷிப்மெண்ட் துறைமுகமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.

- **இந்தியாவில் மக்கள் பல்லுயிர் பதிவேட்டை (People's Biodiversity Register) வெளியிட்ட முதல் மாநிலம்)**
- ✓ அனைத்து ஊராட்சி அமைப்புகளிலும் மக்கள் பல்லுயிர் பதிவேட்டை வெளியிடும் இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா மாற உள்ளது.




- ✓ ஆற்றல் மிக்க இந்த ஆவணத்திற்கு, சுற்றுச்சூழல் விவரங்கள், நிலப்பரப்புகள், இனங்கள் மற்றும் பாரம்பரிய அறிவு ஆகியவற்றில் அவ்வப்போது புதுப்பிப்புகள் தேவைப்படுகின்றன.
- ✓ கேரள மாநில பல்லுயிர் வாரியம் மாநிலத்தில் உள்ள 50 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பல்லுயிர் பதிவேட்டின் புதுப்பிப்பை 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்ய உள்ளது.


# தேசிய நிகழ்வுகள்

- **இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் புஷ் (India's Green Hydrogen Push)**
- ✓ குறைந்த கார்பன் ஆற்றலின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக, இந்தியாவிற்கு உதவ இரண்டாவது சுற்று 1.5 பில்லியன் டாலர் நிதியுதவி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.




- ✓ இந்த நிதியுதவியானது பசுமை ஹைட்ரஜன், எல்கட்ரோலைசர்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஊடுருவல் ஆகியவற்றின் சந்தையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்த முயற்சியானது இந்தியாவின் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் மற்றும் ஆற்றல் மாற்ற இலக்குகளுடன் ஒத்துப் போகிறது. இந்த இலக்குகளில் 2030 ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகா வாட் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனை அடைதல் மற்றும் 2070க்குள் நிகர பூஜ்ஜியத்தை அடைதல் ஆகியவையும் அடங்கும்.

- **முழு அளவிலான விலங்கு இனங்களின் பட்டியலைத் தயாரித்த முதல் நாடு**
- ✓ ஒரு முக்கியமான மைல்கல்லாக, இந்தியாவில் இருக்கும் விலங்கு இனங்களின் விரிவான பட்டியலை இந்தியா தயாரிக்க முடிந்துள்ளது




- ✓ இதன்மூலம், முழு அளவிலான தேசிய விலங்கினங்களின் சரிபார்ப்புப் பட்டியலை உருவாக்கும் ஒரே நாடாக இந்தியா மாறியுள்ளது. இந்தப் பட்டியலில் 1,04,561 இனங்கள் உள்ளன.

- ✓ கொல்கத்தாவில் உள்ள இந்திய விலங்கியல் ஆய்வகத்தின்109வது நிறுவன தினத்தையொட்டி ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ், 'Fauna of India Checklist Portal' (இந்திய விலங்கினங்களின் சரிபார்ப்புப் போர்ட்டல்) என்ற போர்ட்டலைத் தொடங்கி வைத்தார்.

- ➢ **மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் திங்கட்கிழமை (ஜூலை 1) அன்று அமலுக்கு வருகின்றன.**




- ✓ கடந்த டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா (The Bharatiya Nyaya Sanhita), பாரதிய நாக்ரிக் சுரக்ஷா சன்ஹிதா the Bharatiya Nagrik Suraksha Sanhita) மற்றும் பாரதிய சாக்ஷிய ஆதினியம் (the Bharatiya Sakshya Adhiniyam) ஆகிய சட்டங்கள் முறையே இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி), 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம் சிபிசி), 1973 மற்றும் இந்திய சாட்சியச் சட்டம், 1872 ஆகியவற்றிற்கு மாற்றாகக் கொண்டு வரப்பட்டுள்ளன.
- ✓ இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு காலனித்துவ கால இந்திய தண்டனைச் சட்டம் (இது குற்றவியல் சட்டத்தின் உட்பொருளை வழங்குகிறது), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சட்டத்தை அமலாக்குவதற்கான நடைமுறைகளை வழங்குகிறது) மற்றும் சாட்சியச் சட்டம் ஆகியவை பல திருத்தங்களைக் கண்டுள்ளன.

- ➢ **ஆசியாவின் மிகப்பெரிய விமானப் பயிற்சிப் பள்ளி**
- ✓ மகாராஷ்டிராவின் அமராவதி மாவட்டத்தில் 200 கோடி ரூபாய் முதலீட்டில் தெற்காசியாவின் மிகப்பெரிய விமானப் பயிற்சிப் பள்ளியை ஏர் இந்தியா நிறுவுகிறது.




- ✓ அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த முன்முயற்சியானது, விமான நிலையத்திற்குத் தேவையான நிலையான பைலட் தேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 470 ஏர்பஸ் மற்றும் போயிங் விமானங்களின் மெகா ஆர்டரைத் தொடர்ந்து 2023இல் அதன் விரிவாக்கத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 500 முதல் 700 விமானிகள் தேவைப்படுவர்.

**➢ நிர்மான் போர்டல்**

- ✓ ஒன்றிய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி. கிஷன் ரெட்டி, புதுதில்லியில் ‘தேசிய குடிமைப் பணிகள் தேர்வின் (நிர்மான்) முதன்மை தேர்வாளர்களுக்கு வெகுமதி அளிக்கும் உன்னத முயற்சசி’ (Noble Initiative for Rewarding Mains Aspirants of National Civil Services Examination - NIRMAN)) என்ற போர்ட்டலைத் தொடங்கி வைத்தார்.




- ✓ இது, பிரதமர் நரேந்திர மோடியின் ‘மிஷன் கர்மயோகி’ என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, கோல் இந்தியா லிமிடெட் மூலம் 2024இல் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முதற்கட்டத் தேர்வில் (குடிமைப் பணிகள் மற்றும் வனப் பணிக்கான) தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற கோல் இந்தியா நிறுவனத்தின் இயக்க மாவட்டங்களில் உள்ள திறமையான இளைஞர்களுக்கான ஒரு தனித்துவமான சிஎஸ்ஆர் திட்டமாகும்.

**➢ பாரி (PARI) திட்டம்**

- ✓ லலித் கலா அகாடமி மற்றும் நேஷனல் கேலரி ஆப் மாடர்ன் ஆர்ட் ஆகியவற்றால் செயல்படுத்தப்பட்டு வரும் இந்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் முன் முயற்சியான இந்த பாரி (Public Art of Inia - PARI) திட்டம், நவீன கருப்பொருள்கள் மற்றும் நுட்பங்களை இணைத்துக் கொண்டு பல்லாயிரம் ஆண்டுகால கலைப் பாரம்பரியத்திலிருந்து

(லோக் கலா – லோக் சமஸ்கிருதி) உத்வேகம் பெறும் பொதுக் கலையை வெளிக் கொணர முயற்சிக்கிறது.




- ✓ இந்த வெளிப்பாடுகள் படைப்பாற்றல் மற்றும் கலை வெளிப்பாட்டிற்கான தேசத்தின் நீடித்த அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக, இந்திய சமுதாயத்தில் கலை வைத்திருக்கும் உள்ளார்ந்த மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- ✓ இந்தப் பாரி திட்டத்தின்கீழ் முதல் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெறுகிறது.

## ➢ SEHER திட்டம்

- ✓ பெண்கள் தொழில்முனைவோர் தளம் (Women Entrepreneurship Platform) மற்றும் டிரான்ஸ் யூனியன் சிபில் ஆகியவை இணைந்து இந்தியாவில் பெண் தொழில் முனைவோரை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கடன் கல்வித் திட்டமான செஹர்-ஐ அறிமுகப்படுத்தியுள்ளன.




- ✓ இந்த செஹர் நிதி கல்வியறிவு உள்ளடக்கம் மற்றும் வணிகத் திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான அத்தியாவசிய நிதிக் கருவிகளுக்கான அணுகலை எளிதாக்குகிறது.
- ✓ சிபில் தரவரிசை மற்றும் வணிகக் கடன் அறிக்கைகள் உட்பட நிதி அம்சங்களில் பெண்களுக்கு கல்வியை கற்பிப்பதன்மூலம், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான நிதி விழிப்புணர்வை ஒரு பெரிய தடையாகக் குறிப்பிடுகிறது. நிதி விழிப்புணர்வு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க தடையாக உள்ளது.

- **முதல் தேசிய கட்டணமில்லா போதைப்பொருள் எதிர்ப்பு உதவி எண் சேவையை (First National Toll-Free Anti-Narcotics Helpline) இந்தியா தொடங்கி வைத்துள்ளது**

✓ மனாஸ் (Madak Padarth Nisedh Asuchna Kendra –MANAS) என்ற பெயரில் மின்னஞ்சல் சேவையுடன் இணைந்து இந்தியா தனது முதல் தேசிய கட்டமில்லா போதைப் பொருள் எதிர்ப்பு உதவி எண் சேவை '1933'ஐ அறிமுகப்படுத்த உள்ளது.

✓ ஜூலை 18 அன்று ஏழாவது நார்கோ-ஒருங்கிணைப்பு மையக் கூட்டத்தின்போது ஒன்றிய உள்துறை அமைச்சர் அமீத் ஷாவால் இந்தச் சேவை தொடங்கி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவி மைய சேவை குடிமக்களுக்கு போதைப் பொருள் தொடர்பான குற்றங்களைப் புகாரளிப்பதற்கும் வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் உதவியைப் பெறுவதற்கும் பயனர் நட்பு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **பல்கலைக் கழக மானியக் குழுவின் அம்ரிதா போர்ட்டல் (UGC's ASMITA Project)**

✓ உயர் கல்வியை மேம்படுத்துவதற்காக 22,000 இந்திய மொழி புத்தகங்கள்




✓ கல்வி அமைச்சகமும் பல்கலைக் கழக மானியக் குழுவும் இணைந்து உயர் கல்வியில் இந்திய மொழி இலக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு இலட்சியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

✓ அஸ்மிதா (மொழிபெயர்ப்பு மற்றும் கல்விப் புத்தகங்கள் மூலம் இந்திய மொழிகளில் ஆய்வுப் பொருட்களைப் பெருக்குதல்) (Augmenting Study Materials in Indian Languages through Translation and Academic Writing –ASMITA) என்று பெயரிடப்பட்ட இந்த முயற்சியானது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்திய மொழிகளில் 22,000 புத்தகங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


- **இந்தியாவின் மிகவும் நீளமான மற்றும் மிகப்பெரிய நகர்ப்புற சுரங்கப்பாதை**

✓ மும்பைப் பெருநகரப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் மிக நீளமான மற்றும் மிகப்பெரிய நகர்ப்புற சுரங்கப்பாதை திட்டமான தானே போரிவலி இரட்டை சுரங்கப்பாதையை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.




- ✓ ரூ.16,600 கோடி மதிப்பிலான இந்தத் திட்டமானது தானே மற்றும் போரிவிலி இடையேயான பயண நேரத்தை ஒரு மணி நேரத்திலிருந்து 12 நிமிடங்களாகவும், பயண தூரத்தை 12 கிமீ ஆகவும் குறைத்துள்ளது.
- ✓ இந்தத் திட்டமானது, மும்பையின் இணைப்பை மேம்படுத்தும் நோக்கில் ரூ.29,000 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட பரந்த உள்கட்டமைப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

## ➢ அஸ்ஸாமின் அரச புதைகுழிகள் இப்போது யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில்




- ✓ அஸ்ஸாமைச் சேர்ந்த அஹோம் வம்சத்தின் 700 ஆண்டகள் பழமைவாய்ந்த மண்மேட்டு புதைகுழி அமைப்பான சரைடியோ மொய்டாம்ஸ் (Charaideo Moidams), வெள்ளிக்கிழமை அன்று யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இது இந்த மதிப்புமிக்க பட்டியலில் சேர்க்கப்பட்ட இந்தியாவின் 43வது சொத்தாகும்.
- ✓ டெல்லியில் நடைபெற்று வரும் உலக பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- ✓ இந்த வரலாற்று அங்கீகாரம், சாரெய்டோவில் உள்ள அஹோம் மன்னர்களின் 700 ஆண்டுகள் பழமையான மண்மேட்டு புதை குழி அமைப்பிற்கு உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# திட்டங்கள்

➢ **தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஏழு புதிய திட்டங்களை தொழில்களுக்கு வழங்கியுள்ளது**




✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் தொழில்களுக்கு ஏழு புதிய திட்டங்களை வழங்குவதன்மூலம் பாதுகாப்புத் துறையில் சுயசார்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையை எடுத்துள்ளது.

✓ இந்தத் திட்டங்கள் ஆயுதப்படைகள் மற்றும் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைகளின் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அதே நேரத்தில், இந்தக் களங்களில் தொழில்கள் குறிப்பாக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மற்றும் புத்தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

➢ **புத்தொழில் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கான வேளாண் நிதி (Agri Fund for Start-Ups & Rural Enterprises - AgriSURE)**



✓ இந்திய அரசு 'புத்தொழில் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கான வேளாண் நிதி' என்ற திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளது. இது துறை சார்ந்த, துறை-அஞ்ஞான மற்றும் கடன் மாற்று முதலீட்டு நிதிகளில் (debt Alternative Investment Funds) முதலீடுகள் மூலம் புத்தொழில்கள் மற்றும் வேளாண்மைாளர்களுக்கு ஆதரவளிக்க உள்ளது. அத்துடன், வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ள புத்தொழில்களுக்கு நேரடி பங்கு ஆதரவையும் அளிக்கும்.

- ✓ இந்த முயற்சியானது, 750 கோடி வகை-2 மாற்று முதலீட்டு நிதியை நிறுவுவதன்மூலம் இந்தியாவின் விவசாயத் துறையில் புதுமை மற்றும் நிலைத் தன்மையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ‘ஒரு விஞ்ஞானி, ஒரு தயாரிப்பு’ திட்டம் (One Scientist, One Product)

- ✓ இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (Indian Council of Agricultural Research) இந்தியாவில் விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆராய்ச்சியில் புரட்சியை ஏற்படுத்த உறுதியளிக்கும் ஒரு புதிய முயற்சியை வெளியிட உள்ளது.




- ✓ ஜூலை 16ஆம் தேதி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ள ‘ஒரு விஞ்ஞானி – ஒரு தயாரிப்பு’ திட்டமானது, விவசாய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதற்கான இந்த நிறுவனத்தின் உறுதிப்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

## ➢ மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் (Modified Interest Subvention Scheme)

- ✓ மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்தின்கீழ் குறுகிய கால பயிர்க் கடன்களின் உச்ச வரம்பை ரூ.3 இலட்சத்தில் இருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்த ஒன்றய அரசு திட்டமிட்டுள்ளது.




- ✓ மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் என்பது ஒன்றிய அரசின் திட்டமாகும். இதற்கு ஒன்றிய அரசு 100 விழுக்காடு நிதியளிக்கிறது.
- ✓ கிசான் கிரெடிட் கார்டு மூலம் விவசாயிகள் பெறும் குறுகிய கால விவசாயக் கடன்களை அவர்களின் செயல்பாட்டு மூலதனத் தேவைக்காக சலுகை வட்டி வீதத்தில் வழங்கும் நோக்கத்தில் இது 2006-07ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

➢ **பிரதமரின் ஜன்ஜாதிய உன்னத் கிராம அபியான் (PM Janjatiya Unnat Gram Abhiyaan)**





✓ பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகள் மற்றும் ஆர்வமுள்ள மாவட்டங்களில் உள்ள 63,000 கிராமங்களில் உள்ள 5 கோடி பழங்குடியின குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை முழுமையான செய்து தரும் நோக்கத்தில், மத்திய அரசு பிரதமரின் ஜன் ஜாதிய உன்னத் கிராம அபியான் என்ற திட்டத்தைத் தொடங்கும் என்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செவ்வாய்க்கிழமை அன்று அறிவித்தார்.

✓ குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுக்களுக்கான அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய பிரதமரின் ஜன்மானுக்குப் பிறகு வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம், நாடு முழுவதும் உள்ள பழங்குடியின மக்களுக்கானதாக இருக்கும்.

➢ **மாதிரி திறன் கடன் திட்டம் (Model Skill Loan Scheme)**

✓ 25,000 இளைஞர்களுக்கு கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதற்காக 'மாதிரி திறன் கடன் திட்டம்' அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.




✓ திருத்தப்பட்ட மாதிரி திறன்கடன் திட்டம், புதுதில்லியில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சக இணை அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சரால் தொடங்கப்பட்டது.

✓ எந்தவொரு நிதித் தடையும் இல்லாமல் நாட்டின் இளைஞர்களுக்கு திறன் படிப்புக்கான அணுகலை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ இவற்றில் அதிக கட்டணம் தேவைப்படும் உயர்நிலைப் படிப்புகளும் அடங்கும். இந்த முயற்சியானது, இந்தியாவின் இளைஞர்களை எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் பணியாளர்களாக மாற்ற உதவும்.

### ➢ தமிழ்ப் புதல்வன் திட்டம் (Tamil Pudhalvan Scheme)

- ✓ ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை, அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் தமிழ்வழி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது.




- ✓ மாநில அரசின் இந்தத் தமிழ்ப்புதல்வன் திட்டமானது தமிழ்வழியில் கல்வி கற்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 நிதியுதவியை வழங்குகிறது.
- ✓ அரசு உதவி பெறும்பள்ளிகளாக விரிவாக்கம் செய்யப்படுவதால், 2024-25 நிதியாண்டில் 3.28 இலட்சம் சிறுவர்கள் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கு ரூ.360 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அரசு ஆணை கூறுகிறது.

# நீதிமன்றத் தீர்ப்புகள்

- **விவாகரத்தான முஸ்லீம் பெண்களுக்கு மதச்சார்பற்ற வகையில் பரிகாரம்: உச்ச நீதிமன்றம்**

✓ விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லீம் பெண்களுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125வது பிரிவின்கீழ் 'மதச்சார்பற்ற' பராமரிப்பு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் புதன்கிழமை கூறியது.




✓ முஸ்லீம் பெண்கள் (விவாகரத்து உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 1986இன் கீழ் ஒரு தனிப்பட்ட சட்டத் தீர்வை இயற்றுவதன்மூலம் Cr.PC-இன் பிரிவு 125இன் மதச்சார்பற்ற சட்டப்பூர்வ விதியின்கீழ், ஒரு பரிகாரத்தை விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லீம் பெண்களுக்கு முன்கூட்டியே வழங்க முடியாது என்று அமிகஸ் கியூரி மூத்த வழக்கறிஞர் கவுரவ் அக்வால் கூறியதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

✓ விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லீம் பெண்ணுக்கு, நாட்டில் உள்ள மற்ற சமமான பெண்களுக்குக் கிடைக்கும் அனைத்து பராமரிப்பு உரிமைகளுக்கும் உரிமை உண்டு.

# சர்வதேச நிகழ்வுகள்

➤ **ஜப்பான் புதிய ரூபாய் நோட்டுகளில் ஹோலோகிராபிக் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துகிறது**




- ✓ மேம்பட்ட ஹோலோகிராபியின் உலகின் முன்னோடி பயன்பாடு என்று கூறும் புதிய ரூபாய் நோட்டுகளை ஜப்பான் ஜூலை 3 அன்று அறிமுகப்படுத்தியது.
- ✓ இந்தத் தொழில்நுட்பமானது, வரலாற்று தலைவர்களின் உருவப்படங்களை முப்பரிமாணத்தில் சுழலும் வகையில் மாயையில் உருவாக்கி, கள்ள நோட்டுக்கு எதிரான முக்கிய நடவடிக்கையாகச் செயல்படுகிறது.
- ✓ கடந்த 20 ஆண்டுகளில் ரூபாய் நோட்டுகள் மறுவடிவமைப்பு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

➤ **இங்கிலாந்தின் அடுத்த பிரதமராக கெய்ர் ஸ்டார்மர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்**

- ✓ தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, இங்கிலாந்தின் அடுத்த பிரதமராக கீர் ஸ்டார்மர் பதவியேற்க உள்ளார்.



- ✓ இங்கிலாந்தின் அடுத்த பிரதமராக கெய்ர் ஸ்டார்மர் பதவியேற்க உள்ளார். 14 ஆண்டுகால கன்சர்வேடிவ் அரசாங்கத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த இந்தத் தேர்தலில் தொழிலாளர் கட்சி மொத்தமுள்ள 650 இடங்களில் 412 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றது. இங்கிலாந்தில் ஆட்சி அமைக்க 326 இடங்கள் தேவை.
- ✓ கன்சர்வேட்டிவ் கட்சி 121 இடங்களில் வெற்றி பெற்றது

- **ஆசிய பேரிடர் தயார்நிலை மையத்தின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது (Asian Disaster Preparedness Centre)**

✓ இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ராஜேந்திர சிங், 2024-25ஆம் ஆண்டிற்கான ஆசிய பேரிடர் தயார்நிலை மையத்தின் தலைமைப் பொறுப்பை சீனாவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.




✓ ஒரு தன்னாட்சி அமைப்பாக இருக்கும் ஆசிய பேரிடர் தயார்நிலை மையமானது, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் பேரிடர் அபாயத்தைக் குறைத்தல் மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

✓ இந்தியா மற்றும் 8 நாடுகளான வங்காளதேசம், கம்போடியா, சீனா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியவை ஆசிய பேரிடர் தயார்நிலை மையத்தின் நிறுவன உறுப்பினர்களாக உள்ளன.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

➢ **இந்தியாவும் ரஷ்யாவும் 100 பில்லியன் டாலர் வர்த்தகத்தை நோக்கமாகக் கொண்டுள்ளன**

✓ இந்தியாவும் ரஷ்யாவும் ஆற்றல், வர்த்தகம், உற்பத்தி மற்றும் உரங்கள் துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பை வலியுறுத்தி, 2030ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயியத்துள்ளன.




✓ வர்த்தகத்தை சமநிலைப்படுத்துதல், சுங்கவரி அல்லாத தடைகளைக் குறைத்தல் மற்றும் இந்தியா – யூரேஷிய பொருளாதார ஒன்றிய சுதந்திர வர்த்தக பகுதிகளை ஆராய்தல் ஆகிய பொருள்களில் விவாதங்கள் நடத்தப்பட்டன.

➢ **இந்தியாவும் ரஷ்யாவும் 2024இல் ரூபாய் - ரூபிள் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்கியுள்ளன.**




✓ அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகள் இருந்தபோதிலும், இந்தியாவும் ரஷ்யாவும் கடந்த ஆண்டு முதல் தேசிய நாணயங்களில் (ரூபாய் - ரூபிள்) தங்கள் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்கியுள்ளன என்று ரஷ்யாவின் அரசு கட்டுப்பாட்டில் உள்ள மற்றம் மிகப்பெரிய வங்கியான ஸ்பெர்பேங்க் கூறுகிறது. இது ரஷ்யாவிற்கான இந்திய ஏற்றுமதிகளின் பெரும்பகுதியைக் கையாளுகிறது.

- **இந்தியா – பூடான்**
  - திம்புவில் நடைபெற்ற 3வது இந்தியா – பூடான் வளர்ச்சி ஒத்துழைப்பு பேச்சுவார்த்தையின்போது வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் அவரது பூட்டான பிரதிநிதி ஓம் பெமா சோடென் ஆகியோர் இணைந்து தலைமை தாங்கினார்.




  - இந்த சந்திப்பின்போது, பூட்டான் தரப்பு, 13வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செயல்படுத்தப்படும் புராஜக்ட் டைட் அசிஸ்டஸ் (Project Tied Assistance) முன்மொழிவுகளையும், பிடிஏ திட்டங்களின் முதல் தவணையையும் முன் வைத்தது.
  - பல்வேறு துறைகளில் 4,958 கோடி ரூபாய் மதிப்பிலான மொத்தம் 61 திட்டங்களுக்கு இரு தரப்பும் ஒப்புதல் அளித்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான கலாச்சார சொத்து ஒப்பந்தத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் கையெழுத்திட்டன**
  - இரண்டு நாடுகளின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கலாச்சார சொத்து ஒப்பந்தத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் கையெழுத்திட்டன.




  - இந்த ஒப்பந்தம் கலாச்சார சொத்துக்களின் சட்ட விரோத வர்த்தகத்தைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் திருடப்பட்ட பழங்காலப் பொருட்களை அவற்றின் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பும் செயல்முறையை இது எளிதாக்குகிறது.
  - 1970 யுனெஸ்கோ மாநாட்டை நடத்தும் அமெரிக்க சட்டத்தின்கீழ் அமெரிக்க-இந்திய கலாச்சார சொத்து ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

- ✓ 1970 யுனெஸ்கோ மாநாடு கலாச்சார சொத்துக்களின் சட்ட விரோத இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உரிமையை மாற்றுவதைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **இங்கிலாந்து மற்றும் இந்தியா**

- ✓ இங்கிலாந்து மற்றும் இந்திய அரசுகள் தொழில் நுட்ப பாதுகாப்பு முன்முயற்சியைத் தொடங்கியுள்ளன.




- ✓ தேசிய பாதகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில்நுட்பம் மிகவும் முக்கியமானதாக இருப்பதால், இந்த நாடுகளின் மூலோபாய உறவுகளை மேம்படுத்துவதே குறிக்கோளாக உள்ளது.
- ✓ இந்தியா - இங்கிலாந்து சாலை வரைபடம் 2030 ஆனது, தொழில்நுட்பம் உட்பட இரு நாடுகளின் தலைவர்கள் இணைந்து பணியாற்ற விரும்பும் பல பகுதிகளைப் பட்டியலிட்டுள்ளது.
- ✓ இந்த அமைப்பு முக்கியமான மற்றும் புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய வர்த்தக பிரச்சினைகளைக் கையாளும். இது ஒத்துழைப்புக்கான மிக முக்கியமான பகுதிகளில் முழு விவாதத்திற்கு அனுமதி அளிக்கிறது.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

## ➢ குளோபல் இந்தியா செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு 2024

✓ குளோபல் இந்தியா செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு 2024 இந்தியாவால் நடத்தப்படும். இந்த மாநாடு ஜூலை 3-4 தேதிகளில் புதுதில்லியில் நடத்தப்பட்டது.




✓ இதில் முன்னணி செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள், தொழில்துறை பிரதிநிதிகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் கல்வித்துறை உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்த உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

✓ இந்திய செயற்கை நுண்ணறிவு இயக்கத்தால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள ஏழு முக்கிய பகுதிகளில் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியை மேம்படுத்துவதில் இந்த மாநாடு கவனம் செலுத்துகிறது: கணக்கீட்டு திறன்கள், அடிப்படை மாதிரிகள், தரவுத் தொகுப்புகள், பயன்பாட்டு மேம்பாடு, எதிர்கால திறன்கள், தொடக்க நிதியளித்தல் மற்றும் பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு.

## ➢ 24வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (24th Shanghai Cooperation Organisation)

✓ ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநிலத் தலைவர்கள் கவுன்சிலின் 24வது கூட்டம், ஜூலை 4, 2024 அன்று கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்றது.




✓ இந்த முக்கியமான கூட்டம் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க பல்வேறு நாடுகளின் தலைவர்களை ஒன்றிணைத்தது.

- ‘கொழும்பு செயல்முறை’ (Colombo Process)


✓ ஜெனீவாவில் நடைபெற்ற நிரந்தரப் பிரதிநிதிகள் மட்டக் கூட்டத்தில் ‘கொழும்புச் செயல்முறை’யின் தலைவராக இந்தியா தனது முதல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியது. இது பிராந்திய இடம்பெயர்வு ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க தருணத்தைக் குறிக்கிறது.




✓ 12 ஆசிய உறுப்பு நாடுகளைக் கொண்ட கொழும்பு செயல்முறையானது, நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் அயல்நாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இந்தியாவின் தலைமையின்கீழ், நிதி நிலைத்தன்மை, உறுப்பினர் விரிவாக்கம் மற்றும் அபுதாபி பேச்சுவார்த்தை போன்ற பிராந்திய அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல் ஆகிய முன்னுரிமைகள் இடம்பெற்றுள்ளன.

- **இந்தியா – ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாடு**

✓ பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் அதிகாரப்பூர்வ பயணமாக ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா சென்றார். இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான 22வது வருடாந்திர உச்சி மாநாட்டிற்காக திரு. மோடி தனது பயணத்தின் முதல் கட்டமாக மாஸ்கோவிற்குச் செல்கிறார்.




✓ பாதுகாப்பு, வர்த்தகத் தொடர்புகள், முதலீட்டு உறவுகள், எரிசக்தி ஒத்துழைப்பு, கல்வி, கலாச்சாரம் மற்றும் மக்களிடையேயான பரிமாற்றம் உள்ளிட்ட இருதரப்பு விவகாரங்கள் முழுவதையும் மதிப்பாய்வு செய்வதற்கு பிரதமர் மோடி மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு இந்த வருடாந்திர உச்சி மாநாடு வாய்ப்பளிக்கும்.

- ✓ இரண்டு தலைவர்களும், பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஜி20, கிழக்கு ஆசிய உச்சி மாநாடு மற்றும் ஐ.நா போன்ற அமைப்புகளில் இருதரப்பு ஈடுபாடுகளின் நிலையை மதிப்பிடுவார்கள்.

➢ **உலக ஒலி, ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடு (World Audio Visual Entertainment Summit -WAVES)**

- ✓ நவம்பர் 20 முதல் 24, 2024 வரை, கோவாவில் உலக ஒலி, ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது.




- ✓ உலகின் மிகப்பெரிய திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக விளங்குகிறது.
- ✓ ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் விவாதம், வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் புதுமைக்கான முன்னணி தளமாக இந்த மாநாடு இருக்கும்.
- ✓ இந்த உச்சி மாநாடு புதுமையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் தலைவர்களை ஒன்றிணைக்கும்.

# குழுக்கள்

- **46வது யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழு அமர்வை இந்தியா நடத்துகிறது**
- ✓ இந்தியாவின் கலாச்சார இராஜதந்திரத்திற்கான ஒரு முக்கிய நிகழ்வாக, ஜூலை 21 முதல் 31, 2024 வரை யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வை இந்தியா நடத்த உள்ளது.




- ✓ இந்த பெருமைக்குரிய கூட்டம் புது தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும். இது உலகெங்கிலும் உள்ள பிரதிநிதிகளை ஒன்றிணைத்து, உலகளாவிய கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை விவாதித்து முடிவெடுக்கும்.


- **உலக பாரம்பரிய இளம் வல்லுநர்கள் மன்றம் (World Heritage Young Professionals Forum) 2024**
- ✓ இந்தியா முதன்முறையாக யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழு கூட்டத்தை புதுதில்லியில் 2024 உலக பாரம்பரிய இளம் தொழில் வல்லுநர்கள் மன்றத்துடன் நடத்துகிறது.




- ✓ ஜூலை 14 முதல் 23 வரை, உலகெங்கிலும் உள்ள இளம் தொழில் வல்லுநர்கள் பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியில் தங்கள் திறன்களை மேம்படுத்துவதற்காகக் கூடுவார்கள்.
- ✓ கலாச்சார அமைச்சகம் மற்றும் இந்திய தொல்லியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மன்றம், உள்ளூர் இந்திய பாரம்பரிய நிர்வாகத்துடன் உலகளாவிய பாரம்பரியக் கருத்துகளை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறது.

- **உலக பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வு**

✓ உலக பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வு புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் ஜூலை 21 முதல் 31 வரை நடைபெறுகிறது.




✓ இந்தியா முதல்முறையாக இந்த நிகழ்வை நடத்துகிறது. பிரதமர் நரேந்திர மோடி இம்மாதம் 21ஆம் தேதி இந்த அமர்வைத் தொடங்கி வைக்கிறார்.

✓ இந்த விழாவில் யுனெஸ்கோவின் இயக்குநர் ஜெனரல் மேடம் ஆட்ரி அசௌலே கலந்து கொள்கிறார்.

APPOLLO STUDY CENTRE

# பாதுகாப்பு

➢ **உலகின் மிகப்பெரிய கடற்படை பயிற்சி ரிம்பாக் (RIMPAC)**

✓ ஹவாயில் உள்ள உலகின் மிகப்பெரிய கடற்படை போர் விளையாட்டான ரிம் ஆப் தி பசிபிக் பயிற்சியில் (Rim of the Pacific Exercise) இந்திய கடற்படை இணைந்துள்ளது.




✓ இது பெர்ல் துறைமுகத்தைத் தலைமையிடமாகக் கொண்ட அமெரிக்க கடற்படையின் இந்தோ-பசிபிக் கமாண்டால் நடத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

✓ அமெரிக்க கடற்படையின் தலைமையில், ஏறத்தாழ 29 நாடுகள் பல பரிமாண பயிற்சியின் தற்போதைய பதிப்பில் பங்கேற்கின்றன. ஆகஸ்ட் 01 வரை நடைபெறும் இந்த மாபெரும் இராணுவ சக்தி மற்றும் ஒத்துழைப்பு நிகழ்ச்சியின் மையமாக ஹவாய் தீவுகள் உள்ளன.

➢ **மைத்ரீ பயிற்சி (Maitree Exercise) 2024**

✓ ஜூலை 1, 2024, இந்தியா – தாய்லாந்து உறவுகளில் ஒரு முக்கியமான நிகழ்வின் தொடக்கத்தைக் குறிக்கிறது.




✓ தாய்லாந்தின் தக் மாகாணத்தில் உள்ள வச்சிரபிரகான் கோட்டையில் (Fort Vachiraprakan) இந்திய ராணுவம் மற்றும் தாய்லாந்து ராயல் ராணுவம் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சியான மைத்ரீ பயிற்சி தொடங்குகிறது.

✓ ஜூலை 15, 12024 வரை நடைபெறும் இந்த இரண்டு வாரப் பயிற்சியானது, இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

➢ **நாடோடி யானை (Nomadic Elephant) பயிற்சி**

- ✓ மேகாலயாவின் உம்ரோய் நகரில் ஜூலை 3ஆம் தேதி 'நாடோடி யானை' என்ற பயிற்சி தொடங்கியது.




- ✓ இந்தியா – மங்கோலியா கூட்டு இராணுவப் பயிற்சியான நாடோடி யானையின் 16வது பதிப்பு இதுவாகும். இது இரண்டு வார பயிற்சி நிகழ்வாகும். இது ஜூலை 16 அன்று முடிவடையும்.
- ✓ இது, பகுதி நகர்ப்புற மற்றும் மலைப்பகுதிகளில் பகுதி மரபு வழி நடவடிக்கைகளில் இரு நாடுகளின் படைகளுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்த முயல்கிறது.
- ✓ ஒவ்வொரு ஆண்டும், இந்தப் பயிற்சி நிகழ்வு மங்கோலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் மாறி மாறி நடைபெறும்.

➢ **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு (DRDO) நாட்டின் சுதேசி லைட் டேங்க் ஆகிய ஜோராவரை (Indigenous Light Tank Zorawar) வெளியிட்டது**

- ✓ நாட்டின் உள்நாட்டு எடைகுறைந்த டேங்கான ஜோராவரின் முன் மாதிரி தயாராக உள்ளது. இது விரைவில் விரிவான சோதனைக்கு உட்படுத்தப்படும்.




- ✓ சனிக்கிழமையன்று வெளியிடப்பட்ட இந்த பீரங்கி, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் லார்சன் மற்றும் டூப்ரோவை முன்னணி ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- ✓ தற்போது கம்மின்ஸ் இஞ்சின் மூலம் இந்த பீரங்கி இயக்கப்படுகிறது. மேலும், உள்நாட்டில் புதிய எஞ்சினை உருவாக்கும் திட்டத்தை டிஆர்டிஓ எடுத்துக் கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

➢ **தமிழ்நாட்டில் மூன்று சோதனை வசதிகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பாதுகாப்ப அமைச்சகம் கையெழுத்திட்டது.**




- ✓ தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத்தின்கீழ் சென்னையில் மூன்று அதிநவீன சோதனை வசதிகளை நிறுவுவதற்கு பாதுகாப்பு அமைச்சகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது – ஆளில்லா வான்வழி அமைப்பு (Unmanned Aerial System), எலக்ட்ரானிக் வார்ஃபேர் மற்றும் எலக்ட்ரோ ஆப்டிக்ஸ் டோமைன்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒன்று.
- ✓ 400 கோடி ரூபாய் செலவில், அதிநவீன சோதனை வசதிகளை அமைப்பதற்காக, ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கால், 2020 மே மாதம் டிடிஐஎஸ் (DTIS) தொடங்கப்பட்டது.

➢ **பிட்ச் பிளாக் (Pitch Black) பயிற்சி**

- ✓ ஆஸ்திரேலியாவில் நடைபெறும் 'பிட்ஸ் பிளாக் பயிற்சியில்' இந்திய விமானப்படையின் எஸ்யு-30 எம்கேஐ-கள் பங்கேற்க உள்ளன.




- ✓ இந்திய விமானப்படையின் எஸ்-30 எம்கேஐ-கள் ஆஸ்திரேலியாவில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பிட்ஸ் பிளாக் என்ற பன்னாட்டு வான்வழிப் போர்ப் பயிற்சியில் கலந்து கொள்ள உள்ளன.
- ✓ இந்த பிட்ஸ் பிளாக் 2024 பயிற்சி ஜூலை 12 முதல் ஆகஸ்ட் 2 வரை நடைபெறும்.
- ✓ 'பிட்ச் பிளாக் பயிற்சி' என்பது ராயல் ஆஸ்திரேலிய விமானப்படையின் சர்வதேச ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கும், ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குமான மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு பறக்கும் நடவடிக்கையாகும்.

## ➢ கேம்காப்டர்-எஸ் (CAMCOPTER S)-100

- ✓ ஆஸ்திரிய நிறுவனமான ஷீபல்-ன் கேம்காப்டர் எஸ்-100 ஆளில்லா வான்வழி அமைப்புக்கான ஒப்பந்தம் மூலம் தனது கடற்படை திறன்களை மேம்படுத்த இந்தியா தயாராக உள்ளது.



- ✓ இந்த அமைப்பு பல்வேறு தீவிர தட்பவெப்ப நிலைகளில் செயல்படக் கூடியதாகும். இது அதிக சகிப்புத் தன்மையை கொண்டது. இது இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.
- ✓ இதை ஏவுவதற்கும் மீட்டெடுப்பதற்கும் குறைந்தபட்ச இடமே தேவைப்படுகிறது. எனவே, இது பல்வேறு கடற்படைக் கப்பல்களில் இருந்து அனுப்புவதற்கு ஏற்றதாக அமைகிறது.

## ➢ பன்னாட்டுப் பயிற்சி கான் குவெஸ்ட் (KHAAN QUEST) 2024

- ✓ கான்குவெஸ்ட் 2024 ஏ்னற பன்னாட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய ராணுவக் குழு தனது பயணத்தைத் தொடங்கியுள்ளது.




- ✓ இந்த பெருமைக்குரிய நிகழ்வு 2024 ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 9 வரை மங்கோலியாவின் உலான்பாதரில் நடைபெற உள்ளது.
- ✓ உலகெங்கிலும் உள்ள இராணுவப் படைகள் ஒத்துழைப்பதற்கும், அவர்களின் அமைதி காக்கும் திறன்களை மேம்படுத்துவதற்கும் இந்தப் பயிற்சி ஒரு தளமாக செயல்படுகிறது.

APPOLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- **இந்தியாவின் ஏற்றுமதி 200 பில்லியன் அமெரிக்க டாலரைத் தாண்டியது**
  - 2024-25 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல் - ஜூன்) இந்தியாவின் ஏற்றுமதி 200 பில்லியன் அமெரிக்க டாலரைத் தாண்டியுள்ளது.




  - 800 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற வருடாந்திர இலக்கை எட்டும் நம்பிக்கையுடன் இருப்பதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.
  - வர்த்தக அமைச்சகத்தின் தரவுகளின்படி, சரக்கு மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய இந்தியாவின் மொத்த ஏற்றுமதி ஜூன் மாதத்தில் 65.47 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 5.4 விழுக்காடு அதிகமாகும். சரக்கு ஏற்றுமதி 34.42 பில்லியன் டாலரில் இருந்து 35.20 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
  - சிங்கப்பூர், சீனா, ரஷ்யா, ஈராக் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளுக்கான ஏற்றுமதியில் கணிசமான உயர்வு ஏற்பட்டுள்ளது.

- **சர்வதேச நாணய நிதியம் (IMF) 2024-25க்கு இந்தியாவின் ஜிடிபி முன்னறிவிப்பை 7 விழுக்காடாக உயர்த்தியுள்ளது**
  - சர்வதேச நாணய நிதியம் நடப்பு நிதியாண்டிற்கான இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சிக் கணிப்பை 7 விழுக்காடாக மாற்றியுள்ளது. இது முந்தைய கணிப்புகளிலிருந்து 20 அடிப்படைப் புள்ளிகள் அதிகம் ஆகும்.




- ✓ இந்த மேல்நோக்கிய திருத்தத்திற்கு காரணம், குறிப்பாக கிராமப்புறங்களில் மேம்பட்ட நுகர்வு வாய்ப்புகளே ஆகும்.
- ✓ இருப்பினும், அடுத்த நிதியாண்டில் 6.5 விழுக்காடு என்ற மெதுவான வளர்ச்சி விகிதத்தை சர்வதேச நாணய நிதியம் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- ➢ **2024-25 பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்**
- ➢ **பட்ஜெட் மையக் கருத்து**
- ✓ ‘விக்சித் பாரத்’ தொடர்விற்கான சாலை வரைபடம் (Roadmap for the pursuit of ‘Viksit Bharat’).

- ➢ **நான்கு முக்கிய குழுக்களில் கவனம்**
- ✓ மகிளாயென் (பெண்கள்)
- ✓ கரீப் (ஏழை)
- ✓ யுவா (இளைஞர்)
- ✓ அன்னதாதா (விவசாயி)

- ➢ **2024-25க்கான முக்கிய நிதி விவரங்கள்**
- ➢ மொத்த வரவுகள்
- ➢ மொத்த வரவுகள் (கடன்கள் தவிர்த்து) 32.07 இலட்சம் கோடி
- ➢ மொத்த செலவு
- ➢ மொத்த செலவு: 48.21 இலட்சம் கோடி

- ➢ **‘விக்சித் பாரத்’ திட்டத்தைத் தொடர்வதற்கான ஒன்பது பட்ஜெட் முன்னுரிமைகள்**
- ✓ விவசாயத்தில் உற்பத்தித் திறன் மற்றும் பின்னடைவு
- ✓ வேலைவாய்ப்பு மற்றும் திறன்
- ✓ உள்ளடக்கிய மனித வள மேம்பாடு மற்றும் சமூக நீதி
- ✓ உற்பத்தி மற்றும் சேவைகள்
- ✓ நகர்ப்புற வளர்ச்சி
- ✓ ஆற்றல் பாதுகாப்பு
- ✓ உள்கட்டமைப்பு
- ✓ கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
- ✓ அடுத்த தலைமுறை சீர்திருத்தங்கள்

- **விண்வெளி பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்காக 1000 கோடி ரூபாய் துணிகர முதலீட்டு நிதி (Venture Capital Fund)**

✓ பட்ஜெட்டில், அடுத்த 10 ஆண்டுகளில் விண்வெளிப் பொருளாதாரத்தை ஐந்து மடங்கு விரிவுபடுத்துவதற்காக ரூ.1000 கோடி துணிகர முதலீட்டு நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.




✓ இந்தத் துணிகர நிதியானது, இந்த மூலதன-தீவிரக் களத்தில் புதிய முயற்சிகள் எதிர்கொள்ளும் நிதிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு படியாகும்.

✓ 2030க்குள் உலகளாவிய வணிக விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கை 10 விழுக்காடாக உயர்த்துவது அரசாங்கத்தின் பார்வை ஆகும்.

✓ இந்தியா 2035ஆம் ஆண்டுக்குள் 'பாரதிய அந்தரிக்ஷா நிலையத்தை' அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் 2040ஆம் அண்டுக்குள் முதல் இந்தியரை நிலவுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

✓ 2047க்குள் 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.

✓ இந்தியா சுதந்திரம் அடைந்த 100வது ஆண்டு நிறைவான 2047ல் 30 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




✓ 'விக்சித் பாரத் @ 2047 என்ற நித்தி ஆயோக்கின் திட்டத்தின்படி, ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானத்தை 18.000 அமெரிக்க டாலராக உயர்த்துவதே இலக்கு ஆகும். நடுத்தர வருவாய் மட்டத்தில் இந்தியா சிக்கித் தவிப்பதைத் தவிர்ப்பதற்காகவே இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ 'விக்சித் பாரத்' அல்லது 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்பது 2047 ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சிக்கான இந்தியாவின் இலக்கை உள்ளடக்கியுள்ளது. வறுமையைக் குறைத்தல், பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் சுற்றுச் சூழல் நிலைத் தன்மையை உறுதி செய்வவதில் கவனம் செலுத்துகிறது.

# நியமனங்கள்

➢ **டாக்டர். சௌம்யா சுவாமிநாதன்**

✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் முதன்மை ஆலோசகராக பேராசிரியர் டாக்டர். சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.




✓ முதன்மை ஆலோசகராக, பேராசிரியர் சுவாமிநாதன், திட்ட இலக்குகளை அடைவதற்கான ஒட்டு மொத்த மூலோபாயத்தில் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவார். உகந்த முடிவுகளுக்கு கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் தேவையான பாடத் திட்ட சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பார் மற்றும் ஆராய்ச்சி உத்தி குறித்து ஆலோசனைகளை வழங்குவார்.

# விருதுகள்

- **மசாலா விருது (Spice Award) 2024**
- ✓ வேளாண் தொழிலதிபர் சொப்னா கல்லிங்கல் 2024ஆம் ஆண்டுக்கான மசாலா விருதைப் பெற்றார்.




- ✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் - இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்பைசஸ் ரிசர்ச் மூலம் நிறுவப்பட்ட இந்த மசாலா விருது 2024, கல்லிங்கல் தோட்டத்தைச் சேர்ந்த கல்லிங்கலுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ நிறுவன பல்வகைப்படுத்தல் மற்றும் நிலையான மசாலா அடிப்படையிலான பயிர் முறைகளை ஊக்குவிக்கும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை உத்திகளில் அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ கல்லிங்கல் தோட்டத்தின் முக்கிய பயிர் ஜாதிக்காய் ஆகும்.

- **2024ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாய மாநில விருதை மகாராஷ்டிரா வென்றுள்ளது**
- ✓ 2024ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாய மாநிலத்திற்கான விருதை மகாராஷ்டிரா வென்றுள்ளதாக 15வது விவசாய தலைமைத்துவ விருதுகள் குழு அறிவித்துள்ளது.




- ✓ இந்திய முன்னாள் தலைமை நீதிபதியும் கேரள ஆளுநருமான நீதிபதி பி. சதாசிவம் தலைமையிலான குழு இந்த அறிவிப்பை வெளியிட்டது.

- **தமிழ் எழுத்தாளர் சிவசங்கரி டாக்டர். சி. நாராயண ரெட்டி தேசிய இலக்கிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்**

✓ தமிழ் இலக்கிய, புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரி மிகவும் மதிப்பிற்குரிய டாக்டர். சி. நாராயண ரெட்டி தேசிய இலக்கிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




✓ இந்த மதிப்புமிக்க பாராட்டானது, தமிழ் இலக்கிய கலாச்சாரத்தின் செழுமைக்கு அவரது மகத்தான பங்களிப்பையும் சமகால இந்திய இலக்கியத்தை வடிவமைப்பதில் அவரது பங்கையும் கொண்டாடுகிறது.

- **பிரதமர் மோடி, 'சிறந்த சேவைக்காக' ரஷ்யாவின் உயரிய குடிமக்கள் விருதைப் பெறுகிறார்**

✓ பிரதமர் மோடிக்கு 2019ஆம் ஆண்டு மாஸ்கோ கிரெம்ளின் மாளிகையில் உள்ள செயின்ட் கேத்தரின் ஹாலில் புனித ஆண்ட்ரூ இறைத்தூதருக்கு முதன்முதலில் வழங்கப்பட்ட சம்பிரதாயமான கௌரவம் வழங்கப்பட்டது.




✓ ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மை மற்றும் இரு நாடுகளுக்கிடையேயான நட்பு உறவுகளின் மேம்பாட்டிற்காக அவரது சிறப்பான பங்களிப்பைப் பாராட்டி, இந்த கௌரவம் இந்திய பிரதமருக்கு வழங்கப்பட்டது..

## ➢ **வவசாயத் தலைமைத்துவ விருதுகள் (Agriculture Leadership Awards) 2024**



Nagaland Crowned Best State in Horticulture: Agriculture Leadership Awards 2024

]

- ✓ விவசாய வளர்ச்சியில் அதன் முயற்சிகளுக்கு குறிப்பிடத்தக்க அங்கீகாரமாக, தோட்டக்கலையில் சிறந்து விளங்கிய மாநிலம் என்ற பட்டம் நாகாலாந்துக்கு வழங்கப்பட்டது. இந்த விருது மதிப்புமிக்க விவசாய தலைமைத்து விருதுகள் 2024 வழங்கும் நிகழ்ச்சியின்போது வழங்கப்பட்டது.
- ✓ புதுமையான விவசாய நடைமுறைகள் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான மாநிலத்தின் அர்ப்பணிப்பை இந்த கௌரவம் எடுத்துக்காட்டுகிறது.

## ➢ **ஹான்ஸ் வான் ஹெண்டிக் விருது (Hans von Hentig Award)**

- ✓ ஓய்வுபெற்ற தமிழ்நாடு பேராசிரியர் கே. சொக்கலிங்கம் அவர்களுக்கு மதிப்புமிக்க ஹான்ஸ் வான் ஹெண்டிக் விருது வழங்கப்பட்டது.


Retired Tamil Nadu Professor K. Chockalingam Honoured with Prestigious Hans von Hentig Award

- ✓ பாதிக்கப்பட்ட துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்கான குறிப்பிடத்தக்க அங்கீகாரமாக, இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பேராசிரியர் கே. சொக்கலிங்கம், மதிப்பிறுகரிய ஹான்ஸ் வான் ஹெண்டிக் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ இந்தக் கௌரவமானது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய ஆய்வில் இந்திய புலமைப் பரிசில்களின் உலகளாவிய தாக்கம் மற்றும் குற்றவியல் நீதி அமைப்பில் அவர்களின் அனுபவங்களை எடுத்துக் காட்டுகிறது.

➢ **கோல்டன் மணல் மாஸ்டர் விருது (Golden Sand Master Award)**




- ✓ ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேச மணல் சிற்ப சான்பியன்ஷிப் போட்டியில் தங்க மணல் மாஸ்டர் விருதை வென்ற மணல் சிற்பக் கலைஞர் சதர்சன் பட்நாயக்கை ஒடிசா மாநில முதல்வர் மோகன் சரண் மாஜி கௌரவித்தார்.
- ✓ பட்நாயக்கின் விருது பெற்ற மணல் சிற்பமானது, மகாபிரபு ஜெகநாதரையும், பக்தரான பலராம் தாஸையும் சித்தரித்தது.

➢ **ஆழ்கடலில் துணிச்சலுடன் செயல்பட்டதற்காக இந்திய கடற்படையினர் சர்வதேச கடல்சார் அமைப்பினால் (The International Maritime Organization) கௌரவிக்கப்பட உள்ளனர்.**

- ✓ சர்வதேச கடல்சார் அமைப்பு ஜூலை 10, 2024 அன்று கடல் வெற்றியாளர்களுக்கான 2024 சர்வதேச கடல் அமைப்பு விருதை வெளியிட்டது.



- ✓ மார்ஷல் தீவுகள் பரிந்துரைத்த கேட்பன் அவிலாஷ் ராவத் மற்றும் மார்லின் லுவாண்டா என்ற எண்ணெய் கப்பலின் பணியாளர்கள் ஆகிய இருவரும் 2024 விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மெக்சிகோ கேப்டன் ஜார்ஜ் பெர்னாண்டோ கலாவிஸ் ஃபியூன்டெஸ் மற்றும் பெமெக்ஸ் மாயா என்ற இழுவைப் படகு குழுவினரைப் பரிந்துரைத்தது.
- ✓ இந்திய கடற்படை கப்பலின் விசாகப்பட்டினம் மற்றும் இந்திய கடற்படையின் கேப்டன் பிரிஜேஷ் நம்பியார் ஆகியோருக்கு சர்வதேச கடல்சார் அமைப்பு மூலம் பாராட்டு கடிதங்கள் வழங்கப்பட்டன.

## ➢ **மனித நேயத்திற்கான குல்பென்கியன் பரிசு (Gulbenkian Prize for Humanity)**

- ✓ ஆந்திரப் பிரதேசம், இயற்கை வேளாண்மை மாதிரிக்கான குல்பென்கியன் பரிசை வென்றுள்ளது.




- ✓ புதுமையான விவசாய நடைமுறைகளின் குறிப்பிடத்தக்க அங்கீகாரமாக, ஆந்திரப் பிரதேச சமூகம் நிர்வகிக்கும் இயற்கை வேளாண்மை (Andhra Pradesh Community Managed Natural Farming) முயற்சிக்கு மதிப்புமிக்க மனித நேயத்திற்கான 2024 குல்பென்கியன் பரிசு வழங்கப்பட்டது.
- ✓ இந்தப் பாராட்டு, நிலையான விவசாயத்தில் இந்தியாவின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல், சுற்றுச் சூழல்நட்பு விவசாயத்தில் அதன் முன்னோடி முயற்சிகளுக்காக ஆந்திரப் பிரதேசத்தை உலக வரைபடத்தில் நிறுத்துகிறது.

APPOLO STUDY CENTRE

## ➢ **கோஸ்பார் (COSPAR) 2024 விருதுகள்**

- ✓ விண்வெளி ஆராய்ச்சிக்கான குழு (Committee on Space Research - COSPAR) அதன் 45வது கோப்சார் அறிவியல் கூட்டத்தின்போது, 2024 கோஸ்பார் விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்தது.

- ✓ 2024 கோஸ்பார் விருதுகளை வென்றவர்களில் இரண்டு இந்திய விஞ்ஞானிகளான பிரஹலாத் சந்திர அகர்வால் மற்றும் அனில் பரத்வாஜ் ஆகியோர் அடங்குவர்.
- ✓ பிரஹலாத் சந்திர அகர்வாலுக்கு கோஸ்பார் ஹாரி மாசே விருதும் (**COSPAR Harrie Massey Award**), அனில் பரத்வாஜுக்கு கோஸ்பார் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு ஆகியவற்றின் கூட்டு விருதான விக்ரம் சாராபாய் பதக்கமும் வழங்கப்பட்டன.

- **ஆக்ஸ்போர்டு புக்ஸ்டோர் ஆர்ட்புக் பரிசு 2024 (Oxford Bookstore Art Book Prize 2024)**

✓ கலை வரலாற்று ஆசிரியர் மது கண்ணா, ஆக்ஸ்போர்டு புத்தகக் கடையின் இரண்டாவது பதிப்பான கலைப்புத்தகப் பரிசை தனது 'தந்திரத்தில் தந்திரம்' என்ற புத்தகத்திற்காக வென்றுள்ளார்.




✓ இந்தியா மற்றும் இலங்கைக்கான நார்வே தூதர் மே-எலின் ஸ்டெனர் நடத்திய விருது வழங்கும் விழாவில், கண்ணா மற்றும் புத்தக வெளியீட்டாளர் டிஏஜி ஆகியோருக்கு கோப்பை, சான்றிதழ் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

- **காந்தி மண்டேலா விருது 2020**

✓ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், குவாத்தமாலா மனித உரிமை ஆர்வலருமான ரிகோபெர்டா மென்சு தும், 2020 ஆம் ஆண்டுக்கான காந்தி மண்டேலா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.




✓ பழங்குடியினரின் உரிமைகளுக்காக வாதிடுவதற்கும் அமைதி மற்றும் சமூக நீதியை மேம்படுத்துவதற்கும் அவரது வாழ்நாள் அர்ப்பணிப்பை இந்த மதிப்புமிக்க பாராட்டு அங்கீகரிக்கிறது.

- **அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு (AIFF) விருதுகள் 2024**

APOLLO STUDY CENTRE

✓ 2023-24 சீசனுக்கான இந்திய கால்பந்தில் சிறந்த சாதனைகளை அங்கீகரித்து, அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு சமீபத்தில் தனது வருடாந்திர விருது வழங்கும் விழாவை நடத்தியது.




✓ இந்த ஆண்டின் சிறந்த ஆண் மற்றும் பெண் வீரர் வீராங்கனைகளாக முறையே லாலியன்சுவாலா சாங்டே மற்றும் இந்துமதி கதிரேசன் ஆகியோர் சிறப்பான கௌரவங்களைப் பெற்றனர்.

➢ **சர்வதேச டென்னிஸ் ஹால் ஆப் ஃபேம்**

✓ இந்திய டென்னிஸ் ஜாம்பவான்களான லியாண்டர் பயஸ் மற்றும் விஜய் அமிர்தராஜ் ஆகியோர் சர்வதேச டென்னிஸ் ஹால் ஆப் ஃபேமில் சேர்க்கப்பட்டனர்.




✓ இந்தியா மற்றும் ஆசிய டென்னிஸுக்கான ஒரு வரலாற்று தருணத்தில், முன்னாள் இந்திய டென்னிஸ் வீரர்கள் லியாண்டர் பயஸ் மற்றும் விஜய் அமிர்தராஜ் ஆகியோர் சர்வதேச டென்னிஸ் ஹால் ஆப் ஃபேமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

✓ தங்களின் குறிப்பிடத்தக்க தொழில் வாழ்க்கையைக் கொண்டாடி, ஆசியாவில் டென்னிஸில் குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்து, இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் ஆசிய ஆண்கள் இவர்களே ஆவர்.

➢ **ஐ.ஓ.சி-யின் பெருமைக்குரிய ஒலிம்பிக் ஆர்டர் (Prestigious Olympic Order by IOC)**

✓ சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, இந்தியாவின் முதல் தனிநபர் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற அபினவ் பிந்த்ராவுக்கு மதிப்புமிக்க ஒலிம்பிக் ஆர்டரை வழங்கி கௌரவித்துள்ளது.



- ✓ இந்த அங்கீகாரம் 142வது ஐஓசி அமர்வின்போது, பாரிஸ் ஒலிம்பிக் முடிவதற்கு ஒரு நாள் முன்னதாக, ஆகஸ்ட் 10, 2024 அன்று பாரிசில் நடைபெறும்.
- ✓ ஐஓசி-யின் உயரிய விருதான ஒலிம்பிக் ஆர்டர், ஒலிம்பிக் இயக்கத்திற்கான சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரிக்கிறது.

➢ **சர்வதேச விண்வெளி கூட்டமைப்பு உலக விண்வெளி விருது 2024**




- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சந்திரயான்-3 பணிக்குழு, விண்வெளி ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக சர்வதேச விண்வெளி கூட்டமைப்பு வழங்கிய 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க உலக விண்வெளி விருதை வென்றது.
- ✓ சந்திரயான்-3, சந்திரனின் தென் துருவத்தின் அருகே மென்மையாக தரையிறங்கியதை அடுத்து, இந்தியாவின் சந்திர மிஷன் வரலாற்று சாதனையை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

➢ **மத்திய நீர் ஆணையம் ஜீஇஇஎப் குளோபல் வாட்டர்டெக் விருது 2024 ஐ வென்றது**

- ✓ மத்திய நீர் ஆணையம் புது தில்லியில் குளோபல் எனர்ஜி மற்றும் சுற்றுச் சூழல் அறக்கட்டளை (Global Energy and Environment Foundation) நடத்திய குளோபல் வாட்டர்டெக் உச்சி மாநாடு -2024இல், 'இந்த ஆண்டின் நீர்த்துறை' என்ற பிரிவில் ஜிஇஇஎப் குளோபல் வாட்டர்டெக் விருதைப் பெற்றுள்ளது.

➢ **வி. வெங்கையா கல்வெட்டு விருது**


- ✓ 2024ஆம் ஆண்டிற்கான வி. வெங்கையா கல்வெட்டு விருது, பிரபல தமிழ் கல்வெட்டு மற்றும் வரலாற்றாசிரியர் வி. வேதாசலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




- ✓ கல்வெட்டு, நாணயவியல், கோயில் கலை, சமயம், சமூகம் போன்ற பாடங்களில் 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும், இணை எழுதியும் உள்ள திரு. வேதாச்சலம், இந்திய அரசின் முதல் இந்திய தலைமைக் கல்வெட்டு அறிஞரான வி. வெங்கையாவின் பெயரால் வழங்கப்பட்ட விருதைப் பெறுவது பெருமையளிப்பதாகக் கூறினார்.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **அதிகாரம் உள்ளே: நரேந்திர மோடியின் தலைமைத்துவ மரபு (POWER WITHIN: The Leadership Legacy of NARENDRA MODI)**




- ✓ அதிகாரம் உள்ளே: புகழ்பெற்ற வளர்ச்சி அறிஞர் டர்கடர். ஆர். பாலசுப்ரமணியத்தால் எழுதப்பட்டது இந்நூல். இந்தியாவின் சமூக-பொருளாதார பின்னணியில் அவர் ஆற்றிய பங்களிப்பை உன்னிப்பாகப் படம் பிடித்து, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமைப் பயணத்தின் ஆழமான ஆய்வை வழங்குகிறது.

- **தமிழகத்தின் நாட்டுப்புற தெய்வங்கள் மற்றும் கோட்டைகள் குறித்த புத்தகங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.**




- ✓ தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சுற்றுலாத் துறையுடன் இணைந்து தி இந்து குரூப் ஆப் பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ள தமிழ்நாட்டின் நாட்டார் தெய்வங்கள், வழிபாடு, பாரம்பரியம் மற்றும் பழக்க வழக்கங்கள் மற்றும் தமிழகக் கோட்டைகள்: ஒரு நடைப் பயணம் என்ற தலைப்பில் காபி டேபிள் புத்தகங்களை செவ்வாய்கிழமை வெளியிட்டார்.
- ✓ தி இந்துவின் மூத்த துணை ஆசிரியர் பி. கோலப்பனால் தொகுக்கப்பட்ட நாட்டுப்புற தெய்வங்கள் பற்றிய இந்தப் புத்தகம், தமிழ்நாட்டின் எண்ணற்ற நாட்டார் தெய்வங்களை மையமாகக் கொண்டுள்ளது.

- ✓ ஒரு பொது நோக்கத்திற்காகத் தம் இன்னுயிரை ஈந்த மாவீர்களை தமிழ்ச் சமூகம் வழிபடுகிறது. அந்த மாவீர்களைக் கௌரவிக்கும் வகையில் நடுகற்கள் (மாவீரன் கற்கள்) அமைக்கப்பட்டன.

## ➢ போபால் கைதி (The Prisoner of Bhopal)


- ✓ டிம் வாக்கரின் 'தி பிரிசனர் அப் போபால்', போபால் வாயு சோகத்தின் 40வது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட ஒரு நாவல் ஆகும்.




- ✓ விருது பெற்ற வடிவமைப்பாளரும் எழுத்தாளருமான டிம் வாக்கர் இளம் வாக்காளர்களை இலக்காகக் கொண்டு, 'போபால் கைதி' என்ற ஒரு வரலாற்றுப் புனைகதை நாவலை வெளியிட்டுள்ளார்.
- ✓ இந்தப் புத்தகம் போபால் வாயு துயரத்தின் 40வது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மிக அழிவுகரமான தொழில்துறை பேரழிவுகளில் ஒன்றாகும்.

## ➢ பாறைகள் மற்றும் தடைகளை உடைத்தல்: சுதிப்தா சென்குப்தாவின் சாகச வாழ்க்கை (Breaking Rocks and Barriers: The Adventurous Life of Sudipta Sengupta)

- ✓ சுகிப்தா சென்குப்தாவின் வாழ்க்கையை சிறப்பித்துக் காட்டும். 'பிரேக்கிங் ராக்ஸ் அண்ட் பேரியர்ஸ்' ஜூலை 24 அன்று ஹார்பர்காலின்ஸ் இந்தியாவால் வெளியிடப்படும்.




- ✓ **அண்டார்டிக் பயணம்:** 1983ஆம் ஆண்டில், சென்குப்தா அண்டார்டிகாவில் கால் பதித்த முதல் இந்தியப் பெண்களில் ஒருவரானார். அண்டார்டிகாவிற்கு மூன்றாவது இந்தியப் பயணத்தில் அவர் கலந்து கொண்டார்.

APOLLO STUDY CENTRE

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

➢ **சிரெடோல்பிஸ் எருபெசென்ஸ் (Chiretolpis erubescens)**

✓ நீலகிரியில் 132 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அரிய அந்துப்பூச்சி மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.



✓ முதல் பார்வையில், மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் ஒரு அரிய அந்துப்பூச்சியான சிரெடோல்பிஸ் எருபெசென்ஸ் குறிப்பிடத்தக்கது அல்ல என்று கருதப்படுகிறது.

✓ இருப்பினும், நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் (Nilgiri Biosphere Reserve) வசித்ததாகப் பதிவு செய்யப்பட்ட, 'குறைவாக அறியப்பட்ட உயிரினங்களின்' ஆரோக்கியம் மற்றும் தொடர்ந்து இருப்பது பற்றி எவ்வளவு குறைவாக அறியப்பட்டிருக்கிறது என்பதை இனங்கள் பற்றிய நுணுக்கமான ஆய்வு நமக்கு நினைவூட்டுகிறது..

➢ **இஸ்ரோவின் ஆதித்யா-எல்1 முதல் ஹாலோ ஆர்பிட்டை நிறைவு செய்தது (ISRO's Aditya-L1 Completes First Halo Orbit)**

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஜூன் 2 அன்று, இந்தியாவின் முதல் சூரியப் பயணம் ஜூலை 2 அன்று சூரியன்-பூமி எல்1 புள்ளியைச் சுற்றி அதன் ஒளிவட்டப் பாதையை நிறைவு செய்ததாக அறிவித்தது.




✓ ஸ்டேஷன் கீப்பர் மனோவெர் இரண்டாவது ஒளி வட்ட சுற்றுப் பாதையில் அதன் மாற்றத்திற்குப் பிறகு இந்தக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டது.

➢ **ஜென்ஏஐ கண்டபிடிப்புகளில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. சீனா முன்னணியில் உள்ளது**

✓ இந்தியா 1,350 காப்புரிமைகளுடன் ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (Generative AI) கண்டுபிடிப்புகளில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. சீனா, அமெரிக்கா, கொரிய குடியரசு மற்றும் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது.




✓ **ஜெனரேட்டிவ் ஏஐ கண்டுபிடிப்புகளில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. சீனா, அமெரிக்கா, கொரிய குடியரசு மற்றும் ஜப்பானுக்குப் பின்னால் இந்தியா உள்ளது.**

✓ இந்தியாவின் நிலை எப்படி இருந்தபோதிலும், பொருளாதார தாக்கத்திற்கான குறிப்பிடத்தக்க சாத்தியக் கூறுகளுடன், ஜென்ஏஐ காப்புரிமை வெளியீடுகளில் மிக உயர்ந்த வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை இந்தியா காட்டியுள்ளது.

➢ **மருத்துவ சாதனங்கள் தகவல் அமைப்பு (MeDevIS - Medical Devices Information System)**


✓ உலக சுகாதார அமைப்பு, (**MeDevIS**) மருத்துவ சாதனங்கள் தகவல் அமைப்பு என்ற ஒரு ஆன்லைன் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது மருத்துவ சாதனங்கள் பற்றிய தகவல்களுக்கான முதல் உலகளாவிய திறந்த அணுகல் தீர்வு இல்லமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.




✓ இது பல்வேறு சுகாதார நிலைமைகளைக் கண்டறிதல், சோதனை செய்தல் மற்றும் சிகிச்சைக்கான மருத்துவ சாதனங்களின் தேர்வு, கொள்முதல் மற்றும் பயன்பாடு பற்றிய தகவலறிந்த முடிவுகளை எடுப்பதில் அரசாங்கங்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் பயனர்களுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **மைக்ரோசாப்ட் செயலிழப்பு**

- ✓ உலகளாவிய செயலிழப்பு தொடர்பாக மைக்ரோசாப்ட் மற்றும் அதன் கூட்டாளிகளுடன் அரசாங்கம் தொடர்பில் உள்ளது.




- ✓ க்ரவுட் ஸ்ட்ரைக் ஏஜென்ட் ஃபால்கன் சென்சார் தொடர்பான விண்டோஸ் ஹோஸ்ட்கள் செயலிழந்ததாகவும், தயாரிப்பில் பெறப்பட்ட சமீபத்திய அப்டேட் காரணமாக செயலிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.
- ✓ சம்பந்தப்பட்ட விண்டோஸ் ஹொஸ்ட்கள் ஃபாலகன் சென்சார் தொடர்பான ப்ளு ஸ்கிரீன் ஆஃப் டெத் (பிஎஸ்ஓடி)யை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
- ✓ கிரவுட் ஸ்ட்ரைக்கின் சமீபத்திய புதுப்பிப்பில் சிக்கல்கள் ஏற்பட்டன என்றும், இந்த மாற்றங்கள் கிரவுட் ஸ்ட்ரைக் குழுவால்சரிசெய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.


### ➢ நிபா நோய்தாக்குதல்

- ✓ கடுமையான மூளைக் காய்ச்சல் நோய்க்குறியின் அனைத்து அறிகுறி நிகழ்வுகளையும் பாதுகாப்ப உபகரணங்களுடன் பரிசோதிக்க வேண்டி, எல்லை சோதனைச் சாவடிகளில் மருத்துவக் குழுக்களை 24 மணி நேரமும் நிறுத்துமாறு சுகாதாரத் துணை இயக்குநர்களுக்கு பொது சுகாதார இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.




- ✓ நிபா வைரசின் இயற்கை நீர்த்தேக்கங்களான பெரிய பழ வௌவால்களால் இந்த ஜூனோடிக் நோய் பரவுகிறது.
- ✓ மனிதர்கள் அசுத்தமான பழங்களை சாப்பிட்டால் வைரஸ் தொற்று ஏற்படலாம்.

### ➢ அமீபா மூளைத் தொற்று (Amoebic Brain Infection)



- ✓ கடந்த மூன்று மாதங்களில் கேரளாவில் இளம் பருவத்தினரில் மூன்று இறப்புகள் உட்பட ஐந்து அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் (amoebic meningoencephalitis) நோ்வுகள் பதிவாகியுள்ள நிலையில், மாநிலத்தின் சுகாதாரத் துறையானது தொற்று நோயைத் தடுப்பது, கண்டறிதல் மற்றும் சிகிச்சை குறித்த தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இது நாட்டில் அரிதான ஆனால் ஆபத்தான தொற்றாகும்.
- ✓ ஒரு நோ்வைத் தவிர மற்ற அனைத்து நோ்வுகளிலும், அமீபிக் ஒட்டுண்ணியான நாக்லேரியா ஃபோலேரிதான் (Naegleria fowleri) இதற்குக் காரணமான உயிரினம் ஆகும்.
- ✓ அந்த ஒரு நோ்வில், இதற்குக் காரணமான உயிரினம், மனித சூழலில் காணப்படும் மற்றொரு சுதந்திரமான அமீபாவாகிய, வெர்மமோஈபா வெர்மிஃகோர்மிஸ் (Vermamoeba vermiformis) ஆகும்.

## ➢ அப்போபிஸ் சிறுகோள் (Apophis Asteroid)

- ✓ ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், 2029ஆம் அண்டில் பூமிக்கு மிக அருகில் செல்லும்போது அப்போபிஸ் சிறுகோளை ஆய்வ செய்யும் பணியைத் தொடங்கும்.




- ✓ அமெரிக்க விண்வெளி முகமையானது அப்போபிஸ் சிறு கோளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு விண்வெளி பயணத்தைத் தொடங்கும் இரண்டாவது பெரிய விண்வெளி நிறுவனம் ஆகும். இந்த அப்போபிஸ் 2029இல் பூமியிலிருந்து 32,000 கிமீ தொலைவில் கடந்து செல்லும்.
- ✓ இவ்வளவு பெரிய அளவிலான சிறுகோள் சுமார் 5,000 முதல் 10,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூமிக்கு மிக அருகில் வருகிறது.

- ✓ சிறுகோள்கள் பற்றிய ஆய்வின் முக்கிய நோக்கம் பூமியை சாத்தியமான மோதல்களில் இருந்து பாதுகாக்கும் திறன்களை உருவாக்குவதாகும்.

## ➢ உலக அளவில் பதிவு செய்யப்பட்ட மிகவும் வெப்பமான நாள் (Hottest Day Recorded Globally)

- ✓ ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை கண்காணிப்பாளரால் செவ்வாயன்று வெளியிடப்பட்ட தரவுகளின்படி, ஜூலை 21 உலக அளவில் பதிவு செய்யப்பட்ட மிகவும் வெப்பமான நாளாகும்.




- ✓ கோபர்நிகஸ் காலநிலை மாற்ற சேவையானது, ஞாயிற்றுக்கிழமை அன்று உலகளாவிய சராசரி மேற்பரப்பு காற்றின் வெப்பநிலையானது 17.09 டிகிரி செல்சியஸ் என்று கூறியது. இது 1940க்கு முந்தைய பதிவு புத்தகங்களில் இருந்து மிகவும் வெப்பமானது என்று குறிப்பிட்டுள்ளது.
- ✓ முன்னதாக, ஜூலை 76, 2023 அன்று பதிவு செய்யப்பட்ட முந்தைய அதிகபட்ச வெப்பநிலையான 17.08ஐ விட இந்தப் புதிய தினசரி அதிகபட்ச வெப்பநிலை 0.01 டிகிரி செல்சியஸ் அதிகம் ஆகும்.

# விளையாட்டுகள்

- **டி20 உலகக் கோப்பை**

✓ அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று டி20 உலகக் கோப்பையை வென்ற முதல் அணி என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.




✓ ஜூன் 29 அன்று, பார்படாசில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் ஏழு ரன்கள் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி இந்தியா தனது இரண்டாவது டி20 உலகக் கோப்பை பட்டத்தை வென்றது.

✓ ரோஹித் சர்மா  தலைமையிலான அணி தற்போது உலகக் கோப்பைப் போட்டியில் ஒரு போட்டியில் கூட தோல்வியடையாமல் வெற்றி பெற்றுள்ளது.

✓ 2007ஆம் ஆண்டு முதல் ஆடவர் டி20 உலகக் கோப்பையை வென்ற பிறகு, இப்போது இரண்டுமுறை போட்டியை வென்ற மூன்றாவது அணியாக இந்தியா விளங்குகிறது.

- **2024 பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான இந்திய தடம் மற்றும் களம் அணி நீரஜ் சோப்ரா தலைமையில் செல்லும்.**

✓ 2024 பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான 28 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய தடகளக் குழு நீரஜ் சோப்ரா தலைமையில் செல்லும் என்று இந்திய தடகள கூட்டமைப்பு அறிவித்துள்ளது.




✓ நீரஜ் சோப்ரா மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்திய தடகள வீரர் என்ற வரலாறு படைத்தார்.

- ✓ இந்த ஒலிம்பிக்கில் பங்கேற்கும் முதல் இந்திய 100 மீட்டர் தடை தாண்டும் வீரர் ஜோதி யர்ராஜி ஆவார். ஒலிம்பிக் போட்டிகள் ஜூ 26 முதல் ஆகஸ்ட் 11, 2024 வரை பாரிசில் நடைபெறும்.
- ✓ 2024 பாரிஸ் ஒலிம்பிக்கின் அதிகாரப்பூர்வ திம் பாடல் விக்டர் லீ மான்சே இசையமைத்த 'பரேட்' ஆகும்.

➢ **உக்ரைனின் யாரோஸ்லாவா மஹுசிக் புதிய உயரம் தாண்டுதல் உலக சாதனை படைத்தார்.**

- ✓ பாரிஸ் டயமண்ட் லீக்கில் பெண்களுக்கான உயரம் தாண்டுதலில் உக்ரைனின் யாரோஸ்லாவா முசிக் புதிய உலக சாதனையை படைத்தார். அவர் 1987 முதல் இருந்த சாதனையை முறியடித்தார்.




- ✓ புதிய உலக சாதனை: மஹுசிக்கின் 2.10 மீட்டர் தாண்டுதல் சாதனையானது, பெண்களுக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் முந்தைய உலக சாதனையை முறியடித்து, விளையாட்டில் வரலாற்று சாதனை படைத்துள்ளது.
- ✓ மதிப்புமிக்க தடகளப் போட்டியான பாரிஸ் டயமண்ட் லீக்கில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

➢ **பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவின் தேசியக் கொடியை ஏந்துபவர்களாக பி.வி. சிந்து, சரத் கமல் உள்ளனர்.**



- ✓ டோக்கியோ 2020ல் அமைக்கப்பட்டுள்ள முன்னுதாரணத்தைப் பின்பற்றி, பாரிஸ் 2024 ஒலிம்பிக்கிற்கு இரண்டு கொடி ஏந்தியவர்களைக் கொண்ட பாரம்பரியத்தை இந்தியா தொடரும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.
- ✓ பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து இந்திய அணிக்கான கொடியை ஏந்தும் பெண் வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மூத்த டேபிள் டென்னிஸ் வீரர் ஷரத் கமல், ஆண் கொடி ஏந்துபவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

➢ **விம்பிள்டன்**

- ✓ விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை தோற்கடித்து ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.




- ✓ செக் குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவா, இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினியைத் தோற்கடித்து தனது முதல் விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

➢ **இந்தியாவை உலகளாவிய செஸ் பவர் ஹவுசாக ஆக்குவதை ஐஐடி மெட்ராஸ் நோக்கமாகக் கொண்டுள்ளது.**

- ✓ இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னையின் சென்டர் ஆப் எக்ஸலன்ஸ் இன் ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் அண்ட் அனலிட்டிக்ஸ் (Center of Excellence in Sports Science and Analytics) சமீபத்தல் இந்தியாவை உலகின் மிக முக்கியமான செஸ் மையமாக மாற்றும் திட்டத்தை அறிவித்தது.



- ✓ புது தில்லியில் நடைபெற்ற 'ஸ்போர்ட்ஸ் டெக் ஸ்டார்ட்-அப் கான்க்ளேவ' நிகழ்ச்சியில் இந்த செய்தி பகிரப்பட்டது.
- ✓ ட்ரீம் ஸ்போர்ட்ஸ், வேதாந்த மற்றும் எஸ்எப்ஜ பிளே போன்ற பிரபலமான நிறுவனங்களால் நிதியுதவி செய்யப்படும் பல முக்கியமான திட்டங்கள் இந்த மாநாட்டில் வெளியிடப்பட்டன.

- ✓ இந்தியாவில் சதுரங்கத்தை மேம்படுத்துவதற்கும், அதிக ரசிகர்களை ஈடுபடுத்துவதற்கும், விளையாட்டில் ஏமாற்றுவதை நிறுத்துவதற்கும் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதே இவற்றின் பின்னணியில் உள்ள முக்கியமான யோசனைகள் ஆகும்.

➢ **பாரிஸ் ஒலிம்பிக்ஸ் 2024**

- ✓ பாரிஸ் ஒலிம்பிக் 2024 ஜூலை 26, 2024 அன்று பிரான்சில் தொடங்கியது. பாரிஸ் ஒலிம்பிக் 2024 ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை நடைபெறும்.




- ✓ 2024 கோடைக்கால ஒலிம்பிக்ஸ் என்பது ஒலிம்பிக் விளையாட்டுகளின் 33வது பதிப்பாகும். ஃபிஜியன் தொப்பிகள் பாரிஸ் 2024இன் சின்னங்கள் ஆகும்.
- ✓ கோடைக்கால ஒலிம்பிக் வரலாற்றில் ஒலிம்பிக் விழா நிகழ்ச்சிக்கு விளையாட்டு வீரர்கள் ஆற்றின் வழியாக பயணம் செய்வது இதுவே முதல் முறை ஆகும்.
- ✓ பாரிஸ் ஒலிம்பிக் 2024 தொடக்க விழாவில் இந்தியாவின் நட்சத்திர ஷட்டில் வீரர் பி.வி. சிந்து மற்றும் டேபிள் டென்னிஸ் ஜாம்பவான் ஷரத் கமல் ஆகியோர் கொடி ஏந்தி, இந்திய அணிக்கு தலைமை தாங்கினர்.
- ✓ பாரிஸ் 2024 ஒலிம்பிக்கில் இந்திய அணி 16 விளையாட்டுத் துறைகளில் 70 ஆண்கள் மற்றும் 47 பெண்கள் உட்பட 117 விளையாட்டு வீரர்களை உள்ளடக்கியதாகும்.

➢ **மனுவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெண்கலம் இந்தியாவின் பதக்க வேட்டையைத் தொடங்கி வைத்துள்ளது**

- ✓ 22 வயதான இவர் 10 மீட்டர் ஏர் பிஸ்டர் போட்டியில் பதக்கம் வென்றதன்மூலம் ஒலிம்பிக் மேடையில் இடம் பிடிக்கும் முதல் இந்திய பெண் துப்பாக்கி சுடும் வீராங்கனை ஆவார். அவர் இப்போது 10 மீட்டர் பிஸ்டல் கலப்பு அணி மற்றும் 25மீ பிஸ்டல் போட்டிகளில் போட்டியிடுவார்.



- ✓ இந்த முறை பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதைத் தொடர்ந்து அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். பாரிஸ் 2024 விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை தொடங்கி வைக்கப்பட்டது.


- ➢ **பாரிஸ் ஒலிம்பிக்கில் மனு பாக்கர் மற்றும் சரப்ஜோத் சிங் ஆகியோருக்கு வரலாற்று சிறப்பு மிக்க வெண்கல வெற்றி கிடைத்துள்ளது.**
- ✓ பாரிஸ் ஒலிம்பிக்கில் 10மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு குழு போட்டியில் மனு பாக்கர் மற்றும் சரப்ஜோத் சிங் ஆகியோர் திறமை மற்றும் துல்லியத்தின் குறிப்பிடத்தக்க வெளிப்பாட்டின்மூலம் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர்.




- ✓ இந்த வெற்றியானது, பாரிஸ் ஒலிம்பிக்கில் மனு பாக்கருக்கு இரண்டாவது வெண்கலத்தைப் பெற்றுத் தந்துள்ளது. அத்துடன், சுதந்திரத்திற்குப் பிறகு ஒலிம்பிக் போட்டிகளின் ஒரே பதிப்பில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றுத் தந்தள்ளது.

# அறிக்கைகள்

- **2022-24இல் இந்தியாவில் வறுமை 8.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது: NCAER அறிக்கை**




✓ துணை பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சிலின் (National Council of Applied Economic Research) 'மாறும் சமுதாயத்தில் சமூக பாதுகாப்பு வகைகளை மறுபரிசீலனை செய்தல்' என்ற அறிக்கையின்படி, இந்தியாவில் 2011-12ல் 21.2 விழுக்காடாக இருந்த வறுமை, தொற்று நோய் சவால்கள் இருந்தபோதிலும், 2022-24ல் 8.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

✓ இந்த அறிக்கையை துணை பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சிலின் சோனால்டே தேசாய் எழுதியுள்ளார்.

✓ பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பு ஆகியவை உருவாகி வரும் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்ய ஏற்ற சமூகப் பாதுகாப்பு அமைப்புகளைக் கோருகின்றன.

- **ஐக்கய நாடுகள் அமைப்பின் உலக மக்கள் தொகை வாய்ப்புகள் பற்றிய அறிக்கை**

✓ ஐக்கிய நாடுக்ள சபையின் உலக மக்கள் தொகை வாய்ப்புகள் அறிக்கையின்படி, 2062ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 1.70 பில்லியனை எட்டும்.

✓ தற்போது, உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவின் மக்கள் தொகை 38 ஆண்டுகளுக்குப் பிறகு உச்சத்தை எட்டும்.

✓ இந்தியாவின் மக்கள் தொகை ஜனவரி மற்றும் ஜூலை 2062க்கு இடையில் குறையத் தொடங்கும் என்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

✓ 2063இல் இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 115,000 குறையும். 2064இல் இந்த எண்ணிக்கை 437,000 ஆகவும் 2065இல் 793,000 ஆகவும் அதிகரிக்கும்.

✓ தற்போது, 1.451 பில்லின் மக்கள் தொகையுடன் உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. அதைத் தொடர்ந்து சீனா 1.419 பில்லியனும், அமெரிக்கா 345 மில்லியன் மக்கள் தொகையையும் கொண்டுள்ளன.

- **நிலையான வளர்ச்சி இலக்குகள் இந்தியா அறிக்கை 2023-24ஐ நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.**

✓ நிதி ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்கு இந்தியா குறியீடு 2023-24இன்படி, இந்தியாவின் ஒட்டுமொத்த நிலையான வளர்ச்சி இலக்கு மதிப்பெண் 2020-21இல் 66 இல் இருந்து, 2023-24இல் 71 ஆக உயர்ந்துள்ளது.




- ✓ வறுமைக் குறைப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் காலநிலை நடவடிக்கை ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக இது மேம்பட்டுள்ளது.
- ✓ உத்தரகாண்ட் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் இந்த குறியீட்டில் 79 மதிப்பெண்களைப் பெற்று சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
- ✓ 78 மதிப்பெண்களுடன் தமிழகமும், 77 மதிப்பெண்களுடன் கோவாவும் அடுத்த இடங்களில் உள்ளன.
- ✓ பீகார் (57), ஜார்க்காண்ட் (62), நாகாலாந்து (63) ஆகியவை இந்த ஆண்டுக் குறியீட்டில் மோசமாக விளங்கிய மாநிலங்களாகும்.

➢ **இந்தியா 2030க்குள் 500 பில்லியன் டாலர் மின்னணு பொருட்கள் உற்பத்தியை இலக்காக கொண்டுள்ளது: நிதி ஆயோக்.**


- ✓ சமீபத்திய நிதி ஆயோக் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு, 2030ஆம் ஆண்டக்குள் மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் 500 பில்லியன் டாலர்களை எட்டுவதற்கான இலட்சிய இலக்கை இந்தியா நிர்ணயிக்க வேண்டும்.




- ✓ இந்த இலக்கில் முடிக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தியில் இருந்து 30 பில்லியன் டாலர் மற்றும் உதிரிபாக உற்பத்தியில் இருந்து 150 பில்லியன் டாலர் ஆகியவையும் அடங்கும்.
- ✓ தற்போது. இந்தியாவின் மின்னணு பொருட்கள் உற்பத்தி மொத்தம் 101 பில்லியன் டாலர் ஆகும். முடிக்கப்பட்ட பொருட்களிலிருந்து 86 பில்லியன் டாலர் மற்றும் கூறுகள் மூலம் 15 பில்லியன் டாலர் ஆகியவை இதில் அடங்கும்.

➢ **ஐநாவின் சோபி (SOFI) 2024 அறிக்கை**

➢ 2023இல் உலக மக்கள் தொகையில் 9 விழுக்காடு பேர் பசியால் பாதிக்கப்பட்டுள்ளனர்: ஐநாவின் சோபி (SOFI) 2024 அறிக்கை




✓ 'உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து நிலை (State of Food Security and Nutrition in the World) 2024: அனைத்து வடிவங்களிலும் பசி,உணவு பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிதி' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையின்படி, 2023இல் சுமார் 733 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர் கொண்டனர். இது உலக அளவில் 11 பேரில் ஒருவருக்கும் (தோராயமாக 9 விழுக்காடு) ஆப்பிரிக்காவில் 5 பேரில் ஒருவருக்கும் சமம் ஆகும்.

# தரவரிசைப்பட்டியல்

➢ **சர்வதேச நாணய நிதியம் செயற்கை நுண்ணறிவு தயார்நிலை குறியீட்டை வெளியிட்டது.**

✓ இதில் இந்தியா 72வது இடத்தில் உள்ளது. சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.




✓ சர்வதேச நாணய நிதியம் 174 நாடுகளில் செயற்கை நுண்ணறிவு தயார்நிலையின் அளவைக் கண்காணிக்கும் ஒரு செயற்கை நுண்ணறிவுத் தயாரிப்புக் குறியீடு (Artificial Intelligence Preparedness Index) டேஷ்பொர்டை வெளியிட்டுள்ளது.

✓ இந்த செயற்கை நுண்ணறிவு தயாரிப்புக் குறியீட்டின்படி, இந்திய 0.49 மதிப்புகள் பெற்று 174 நாடுகளில் 72 வது இடத்தைப் பிடித்துள்ளது.

➢ **உலகின் மிகவும் சக்தி வாய்ந்த கடவுச் சீட்டுகள் (World's Most Powerful Passports) 2024**

✓ ஹென்லி பாஸ்போர்ட் குறியீட்டின்படி, 195 உலகளாவிய இடங்களுக்கு விசா இல்லாத அணுகலை வழங்கும் சிங்கப்பூர் பாஸ்போர்ட்டே, உலகின் மிக சக்தி வாய்ந்த கடவுச் சீட்டு என்ற பட்டத்தை மீண்டும் பெற்றுள்ளது.




✓ கூட்டு இரண்டாவது இடம்: பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஸ்பெயின் - 192 செல்லுமிடங்கள்.

✓ கூட்டு 3வது இடம்: ஆஸ்திரியா, பின்லாந்து, அயர்லாந்து, லக்சம்பர்க், நெதர்லாந்து, தென் கொரியா, ஸ்வீடன் - 191 இடங்கள்.

✓ 58 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்ல அனுமதிக்கும் இந்திய கடவுச் சீட்டு 82 வத இடத்தில் உள்ளது.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| **ஜூலை 01** | **தேசிய மருத்துவர்கள் தினம்** | இந்தியாவில் 2024 ஆம் ஆண்டு தேசய மருத்துவர்கள் தினத்திற்கான கருப்பொருள், 'குணப்படுத்தும் கைகள், அக்கறையுள்ள இதயங்கள்' என்பதாகும். |
| **ஜூலை 01** | **ஜிஎஸ்டி தினம்** | இந்த நாள் நாட்டின் நிதி விஷயத்தில் புரட்சியை ஏற்படுத்திய உருமாறும் வரி முறையை அமல்படுத்தியதை நினைவுகூறுகிறது. |
| **ஜூலை 02** | **உலக** விளையாட்டு பத்திரிகையாளர்கள் தினம் | விளையாட்டுக் கதைகளை உயிர்ப்பிப்பவர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு அண்டும் ஜூலை 2 ஆம் தேதி உலக விளையாட்டுப் பத்திரிகையாளர்கள் தினம் கொண்டாடப்படுகிறது. |
| **ஜூலை 02** | **உலக** UFO தினம் | அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்கள் (Unidentified Flying Objects) பற்றி மேலும் அறிந்து கொள்வது மற்றும் பூமிக்கு அப்பால் வாழும் சாத்தியக் கூறுகள் பற்றி சிந்திப்பது இந்த நாளின் சிறப்பு ஆகும். |
| **ஜூலை 03** | **சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லாத தினம்** | இந்த நாள் பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துவதை நிறுத்தவும், சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றுகளைக் கண்டறியவும் மக்களை ஊக்குவிக்கிறது. |
| **ஜூலை 03** | **கீழ்ப்படியாமை நாள்** | கீழ்படியாமை தினம், வரலாறு முழுவதும் கீழ்ப்படியாமையின் ஆழமான தாக்கத்தையும், சமகால சமூகத்தில் அதன் பொருத்தத்தையும் பிரதிபலிக்க நம்மை அழைக்கிறது. |
| **ஜூலை 06** | **சர்வதேச கூட்டுறவுதினம்** | 'கூட்டுறவுகள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குதல்' என்பதே கருப்பொருளாகும். |
| **ஜூலை 06** | **உலக உயிரியல் பூங்காக்கள் தினம்** | விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய நோய்த் தொற்றுகள்- ஜூனோடிக் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை |

| | | |
|---|---|---|
| | | ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான வருடாந்திர அனுசரிப்பு ஆகும். |
| **ஜூலை 10** | **உலகளாவிய ஆற்றல் சுதந்திர தினம்** | இந்நாளின் குறிக்கோள்: ஆற்றல் மாற்று வடிவங்களுக்கான விழிப்புணர்வை ஊக்குவித்தல் |
| **ஜூலை 10** | **தேசிய மீன் விவசாயிகள் தினம்** | மீன் பண்ணையாளர்கள், மீன வளர்ப்பு நிபுணர்கள் மற்றும் மீன் பிடித் துறையில் பங்குதாரர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளைக் கௌரவிக்கும் நாள். |
| **ஜூலை 11** | **உலக மக்கள் தொகை தினம்** | 'யாரையும் விட்டு விடாதீர்கள், அனைவரையும் எண்ணுங்கள்' என்பது மக்கள் தொகை இயக்கவியல் மற்றும் நிலையான வளர்ச்சியின் முக்கியமான அம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. |
| **ஜூலை 12** | **மணல் மற்றும் தூசி புயல்களை எதிர்க்கும் சர்வதேச தினம்** | இது மணல் மற்றும் தூசி புயல்கள் தொடர்பான சர்வதேச கவலையை அங்கீகரிக்கிறது. |
| **ஜூலை 15** | **உலக இளைஞர் திறன் தினம்** | மையக் கருத்து, 'அமைதி மற்றும் வளர்ச்சிக்கான இளைஞர் திறன்கள்' |
| **ஜூலை 16** | **உலக பாம்பு தினம்** | சுற்றுச் சூழல் அமைப்புகளில் பாம்புகள் வகிக்கும் பங்கு பற்றி பொதுமக்களுக்குக் கற்பித்தல், கட்டுக்கதைகளை அகற்றுதல் மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஜூலை 17** | **சர்வதேச நீதிக்கான உலக தினம்** | 'தடைகளை சமாளிப்பது மற்றும் சமூக நீதிக்கான வாய்ப்புகளைக் கட்டவிழ்த்து விடுவது' என்பது மையக் கருத்து. |
| **ஜூலை 18** | **தமிழ்நாடு தினம்** | 18.07.1967 அன்று அப்போதைய தமிழக முதல்வர் சி.என். அண்ணாதுரை தலைமையிலான அரசு, சென்னை மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு என மாற்றக் கோரி, சென்னை மாநில சட்டப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியது. |
| **ஜூலை 18** | **நெல்சன் மண்டேலா சர்வதேச தினம்** | நெல்சன் மண்டேலா சர்வதேச தினம். வரலாற்றின் மிகவும் எழுச்சியூட்டும் நபர்களில் ஒருவரின் வாழ்க்கை மற்றும் நீடித்த |

| | | |
|---|---|---|
| | | பாரம்பரியத்தை மதிக்கிறது. |
| **ஜூலை 18** | **உலக கேட்டல்தினம்** | 2024 மையக் கருத்து: ஒலியின் வீவைக் கேட்டல். |
| **ஜூலை 20** | **சர்வதேச செஸ் தினம்** | கல்வி, தர்க்க ரீதியான சிந்தனையை வளர்ப்பது மற்றும் நாடுகள் முழுவதும் கலாச்சார பரிமாற்றம் ஆகியவற்றிற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாக சதுரங்கத்தை ஊக்குவிக்க இந்த நாள் ஒரு தளமாக செயல்படுகிறது. |
| **ஜூலை 20** | **சர்வதேச நிலவு தினம்** | ஐக்கிய நாடுகள் அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச தினம் இது ஆகும். இது சந்திர ஆய்வில் மனிதகுலத்தின் சாதனைகளை நினைவுகூரும். |
| **ஜூலை 22** | **தேசிய மாம்பழ தினம்** | ஒவ்வொரு ஆண்டும், தேசிய மாம்பழ தினம் அதன் நேர்த்தியான நன்மைகளுக்காக அறியப்படும் வகையில் கொண்டாடப்படுகிறது. |
| **ஜூலை 22** | **இந்தியாவின் தேசியக் கொடி தினம்** | இந்த நாள் இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையின் அடையாளமாகக் கருதப்படுவதால், இந்த நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்று 'இந்தியாவைத் தெரிந்து கொள்ளுங்கள்' (Know India) என்ற அரசு இணையதளமே தெரிவித்துள்ளது. |
| **ஜூலை 23** | **இந்தியாவில் தேசிய ஒலிபரப்பு தினம்** | இந்த நாள் இந்தியாவின் வளர்ச்சி, கல்வி மேம்பாடு மற்றும் கலாச்சார பாதுகாப்பு ஆகியவற்றில் ஒளிபரப்பு ஆற்றிய முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. |
| **ஜூலை 24** | **தேசிய வருமான வரி தினம்** | வருமான வரி என்பது ஒரு நிதியாண்டில் தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் ஈட்டிய வருமானத்தின் மீதான முக்கியமான அரசு வரியாகும். |
| **ஜூலை 25** | **உலக நீரில் மூழ்குவதைத் தடுக்கும் நாள்** | மையக் கருத்து 2024: யார் வேண்டுமானாலும் மூழ்கக் கூடும், ஆனால் யாரும் மூழ்கக்கூடாது. |
| **ஜூலை 26** | **கார்கில் வெற்றி தினம்** | 1999 கார்கில் மோதலின்போது பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய ஆயுதப் படைகளின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக இந்த நாள் |

| | | |
|---|---|---|
| | | அனுசரிக்கப்படுகிறது. |
| **ஜூலை 28** | **உலக ஹெபடைடிஸ் தினம்** | மையக் கருத்து: இது செயலுக்கான நேரம் |
| **ஜூலை 28** | **உலக இயற்கை பாதுகாப்பு தினம்** | உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் 2024 ஆனது இயற்கையைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது மற்றும் அனுசரிக்கப்படுகிறது. |
| **ஜூலை 29** | **சர்வதேச புலிகள் தினம்** | இந்த உலகளாவிய முன் முயற்சியானது புலிகளின் இயற்கையான வாழ்விடங்களைப் பாதுகாப்பதிலும் அவற்றைப் பாதுகாப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது. |
| **ஜூலை 30** | **சர்வதேச நட்பு தினம்** | மக்கள், நாடுகள், கலாச்சாரங்கள் மற்றும் தனிநபர்களிடையே நட்பை ஊக்குவித்தல், அமைதி முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் சமூகங்களுக்கு இடையே பாலங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களில் அனுசரிக்கப்படுகிறது. |
| **ஜூலை 30** | **ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'மனித கடத்தலுக்கு எதிரான போராட்டத்தில் எந்த குழந்தையையும் விட்டு விடாதீர்கள்' |
| **ஜூலை 31** | **உலக ரேஞ்சர் தினம்** | மையக் கருத்து 2024 – 30க்கு 30 |

APPOLO STUDY CENTRE

# GROUP I – PRELIMINARY – 2024 – 13/07/24
# UNIT – II - CURRENT EVENTS

## Latest diary of events

1. Consider the following statements, choose the correct answer:
(i) G20's Constitution is a Formal Document
(ii) G20's Governance is based on the principles of Consensus
(iii) G20's Inclusivity and Representation is the basis of the Presidency
(iv) G20 Respect for unity; rather than sovereignty
a. (iv) only correct
**b. (ii) and (iii) only correct**
c. (i) and (ii) only correct
d. (iii) only correct
e. Answer not known
கீழ்கண்ட வாக்கியங்களை கருதுக. சரியான விடையை தேர்ந்தெடுக்க:
(i) G20- நாடுகளின் அரசியலமைப்பானது ஓர் முறையான ஆவணமாகும்
(ii) G 20- நாடுகளின் நிருவானமானது ஒருமித்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது
(iii) G 20 - இணக்கம் என்ற கோட்பாடாலானது உள்ளடக்கியிருப்பதும், பிரதிநிதித்துவம் அதன் தலைமைக்கான அடிப்படைகளாகும்.
(iv) G-20 ஒற்றுமைக்கே மரியாதை, இறையாண்மைக்கு அல்ல
a. (iv) மட்டும் சரியானது
**b. (ii) மற்றும் (iii) மட்டும் சரியானது**
c. (i) மற்றும் (ii) மட்டும் சரியானது
d. (iii) மட்டும் சரியானது
e. விடை தெரியவில்லை

2. Storm in UAE:
Assertion (A): United Arab Emirates faced a severe thunder storm, brought one ofthe heaviest rainfall on record
Reason (R):Causes for the heavy rainfall is due to trade winds and waves
**a. A is true, but R is false**
b. Both A and R are true, and R is the correct explanation of A
c. A is false, but R is true
d. Both A and R are true, but R is not the correct explanation of A
e. Answer not known
ஐக்கிய அரபு எமிரேட்சில் புயல்:
கூற்று (A): ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கடுமையான இடியுடன் கூடிய மழையை எதிர்கொண்டது

காரணம் (R): பலத்த மழைக்கான காரணங்கள் வர்த்தக காற்று மற்றும் அலைகள்

**a. A சரியானது ஆனால் R தவறு**

b. A மற்றும் R இரண்டும் சரி, மற்றும் R என்பது A விற்கு சரியான விளக்கம்

c. A தவறு, ஆனால் R சரி

d. A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல

e. விடை தெரியவில்லை

3. The bird that was affected by an oil spill in Kosasthalaiyar in December 2023

**a. Spot-billed Pelican** b. Flamingo c. Macaw

d. Pigeon e. Answer not known

2023, டிசம்பரில் கொசஸ்தலையாற்றில் ஏற்பட்ட எண்ணெய் கசிவால் மிகவும் பாதிக்கப்பட்ட பறவை?

**a. ஸ்பாட்-பில்டு பெலிகன்** b. ∴பிளமிங்கோ c. மக்கா

d. புறா e. விடை தெரியவில்லை

## Geography

4. Choose the right match among the following

1. Mars - Mangalyan
2. Pinatubo - Volcano in Japan
3. Crust - Inner layer
4. Ganymede - Saturn's moon

**a. 1 alone is correct** b. 1 and 2 are correct c. 1, 2 and 3 are correct

d. All are correct e. Answer not known

கீழ்க்கண்டவற்றுள் சரியான பொருத்தத்தை தேர்வு செய்

1. செவ்வாய் - மங்கல்யான்
2. பினாடுபோ - ஜப்பானின் எரிமலை
3. கிரஸ்டு - உள் அடுக்கு
4. கானிமிடு - சனியின் நிலவு

**a. 1 மட்டும் சரியானது** b. 1 மற்றும் 2 சரியானவை

c. 1, 2 மற்றும் 3 சரியானவை d. அனைத்தும் சரி

e. விடை தெரியவில்லை

5. Which Housing Scheme assures a house not only to the homeless slum dwellers but to the urban poor, LIG and MIG categories?

a. MUDF b. TNUDP c. JNNURM

**d. PMAY(U)** e. Answer not known

அரசின் எந்த வீட்டு வசதி திட்டமானது வீடற்ற மக்களுக்கு மட்டுமல்லாது நகர ஏழைகள், குறைந்த வருமானம் உள்ளவர்கள் மற்றும் நடுத்தர வர்க்க மக்களுக்கும் ஒரு வீட்டை உறுதி செய்கிறது?

a. MUDF b. TNUDP c. JNNURM

**d. PMAY(U)** e. விடை தெரியவில்லை

6. The following scheme is implemented with an objective of reducing maternal and neo-natal mortality by promoting institutional delivery amongst the poor pregnant women?

a. Pradhan Mantri Swasthya Suraksha Yojana

b. National Urban Health Mission

**c. Janani Suraksha Yojana**

d. Swachh Bharat Mission

e. Answer not known

பின்வரும் திட்டங்களில் ஏழை கர்ப்பிணிப் பெண்களிடையே நிறுவன ரீதியான பிரசவத்தை ஊக்குவித்த அதன் மூலம் தாய் மற்றும் பிறந்த குழந்தை இறப்பை குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறது?

a. பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா

b. தேசிய நகர்புற சுகாதார திட்டம்

**c. ஜனனி சுரக்ஷா யோஜனா**

d. சுகாதார இந்தியா இயக்கம்

e. விடை தெரியவில்லை

7. Match the following

| | |
|---|---|
| A. PM eVidya | 1. Testing core concepts, application based questions, high order thinking |
| B. PM Poshan Shakti Nirman | 2. Volunteers to contribute assets / materials / equipments to schools |
| C. Vidyanjali 2.0 | 3. Digital education to coherent multi-mode access to education |
| D. SAFAL | 4. Provision of supplementary nutrition at school |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| **c.** | **3** | **4** | **2** | **1** |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. Answer not known

பொருத்துக

| | |
|---|---|
| A. PM eவித்யா | 1. சோதனை அடிப்படை கருத்துக்கள், பயன்பாடு சார்ந்த கேள்விகள், உயர் வரிசை சிந்தனை |
| B. PM போஷான் சக்தி நிர்மான் | 2. தன்னார்வலர்கள், பள்ளிகளுக்கு சொத்துக்கள் / பொருட்கள் / உபகரணங்கள் போன்றவற்றை கொடுப்பது |
| C. வித்யாஞ்சலி 2.0 | 3. டிஜிட்டல் கல்வியின் வாயிலாக பன்முக முறை கல்வி அணுகுதல் |
| D. சஃபல் | 4. பள்ளியில் கூடுதல் ஊட்டச்சத்தை வழங்குதல் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| **c.** | **3** | **4** | **2** | **1** |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

8. Which among the following was announced in Union Budget 2022-23, with regard to crop assessment, digitisation of land records and spraying of insecticides and nutrients?

a. PM eVidya
b. PM Sampada
c. Rashtriya Krishi Vikas Yojana
**d. Kisan Drones**
e. Answer not known

பின்வருவனவற்றுள் பயிர் மதிப்பீடு, நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், பூச்சிக் கொல்லிகள் தெளித்தல் மற்றும் ஊட்டச்சத்துக்கள் ஆகியவை குறித்து மத்திய பட்ஜெட் 2022-23இல் அறிவிக்கப்பட்டவை எது?

a. பி.எம். இவித்யா
b. பி.எம். சம்பதா
c. ராஷ்ட்ரிய கிரிஷ் விகாஸ் யோஜனா
**d. கிசான் ட்ரோன்கள்**
e. விடை தெரியவில்லை

9. "Kissan Rath" a friendly Mobile App is launched for

i. Locate the Mandi

ii. Transporting agro-products

iii. e-trading

a. i only　　b. ii and iii only　　c. i and iii only

**d. ii only**　　e. Answer not known

"கிசான் ரத்" என்ற செயலி இதற்காகப் பயன்படுகிறது

i. சந்தையைக் கண்டறிய

ii. வேளாண் பொருட்கள் போக்குவரத்திற்கு

iii. இணைய வழி வணிகம்

a. i மட்டும்　　b. ii மற்றும் iii மட்டும்　　c. i மற்றும் iii மட்டும்

**d. ii மட்டும்**　　e. விடை தெரியவில்லை

## Eminent personalities and places in news

10. Find Out the incorrect statements about 2024 – Padamashri awardees.

a. He is form West Bengal

b. He significantly contributed to the field of environmental health and safety

c. His research primarily focuses of remediation and treatments of arsenic poisoning

**d. He had been conferred Padmashri Award (2024) in the field of Medicine**

e. Answer not known

2024 ம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது பெற்ற முனைவர். நாராயண் சக்ரபர்த்தி பற்றிய தவறான கூற்றை கண்டுபிடிக்கவும்.

a. அவர் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்

b. அவர் சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையில் குறிப்பிடத்தக்க பங்களித்துள்ளார்.

c. அவரது ஆராய்ச்சி ஆர்சனிக் நச்சுத்தன்மையின் தீர்வு மற்றும் சிகிச்சையை முதன்மையாகக் கொண்டது

d. **அவருக்கு 2024 ம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருத மருத்துவத் துறையில் வழங்கப்பட்டது**

e. விடை தெரியவில்லை

11. A In which hills of Mehalaya 'Geological Survey of India' (GSI), discovered ancient fossils?

a. South Garo hills b. East Khasi hills **c. West Khashi hills**

d. Jaintia hills e. Answer not known

இந்திய புவியியல் ஆய்வு மையம், மேகாலயாவில் எந்த மலையில் பழமையான புதைபடிவத்தைக் கண்டறிந்தது?

a. தெற்கு கேரோ மலைகள் b. கிழக்கு காசி மலைகள்

**c. மேற்கு காசி மலைகள்**

d. ஜைன்டியா மலைகள் e. விடை தெரியவில்லை

## Welfare orientedGovernment schemes and their utility

12. Consider the following statements and related to Janani Suraksha Yojana choose the correct answer:

1. The Scheme was introduced to reduce Maternal Mortality and Infant Mortality Rate
2. It is 100% centrally sponsored
3. It is 100% state sponsored

**a. 1 and 2** b. 1 and 3 c. 2 and 3

d. 3 only e. Answer not known

ஜனனி சுரக்ஷா யோஜனா தொடர்புடைய வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தை குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம்
2. 100 சதவீத மத்திய அரசால் நிதியுதவி
3. 100 சதவீத மாநில அரசால் நிதியுதவி

**a. 1 மற்றும் 2** b. 1 மற்றும் 3 c. 2 மற்றும் 3

d. 3 மட்டும் e. விடை தெரியவில்லை

13. Which of the following schemes are about The Rural Electrification?

i. Deen Dayal Upathyaya Gram Jyoti Yojana (DDUGJY)

ii. Deen Dayal Upathyaya Grameen Koushalya Yojana (DDUGKY)

iii. Pradhan Mantri Sahaj Bijili Har Ghar Yojana (SAUBHAGYA)

a. i and ii only **b. i and iii only** c. ii and iii only

d. i, ii and iii e. Answer not known

கிராம மின்மயமாக்குதல் என்பது இநத திட்டங்களின் மூலமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

i. தீன தயாள உபாத்யாய கிராம ஜோதி திட்டம்

ii. தீன தயாள உபாத்யாய கிராமின் கௌசல்யா திட்டம்

iii. பிரதான் மந்திரி சஹாஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா

a. i மற்றும் ii மட்டும் **b. i மற்றும் iii மட்டும்** c. ii மற்றும் iii மட்டும்

d. i, ii மற்றும் iii e. விடை தெரியவில்லை

14. Which of the following is not correct abbreviation?

1. RLEGP - Rural Landless Employment Guarantee Programme
2. SGSY - Sampoorne Grameen Self Reliance yojana
3. CSRE - Central Scheme for Rural Employment
4. NREGA - National Rural Education Guarantee Act

a. 1 and 3 **b. 2 and 4** c. 1 and 2

d. 3 and 4 e. Answer not known

பின்வருவனவற்றில் எது தவறுதலாக பொருத்தப்பட்டுள்ளது?

1. RLEGP - ஊரக நிலமற்றோருக்கான வேலை உறுதி திட்டம்
2. SGSY - சம்பூர்ணா ஊரக சுயசார்பு திட்டம்
3. GSRE - மத்திய ஊரக வேலைவாய்ப்பு திட்டம்
4. NREGA - தேசிய ஊரக கல்வி உறுதித் திட்டம்

a. 1 மற்றும் 3 **b. 2 மற்றும் 4** c. 1 மற்றும் 2

d. 3 மற்றும் 4 e. விடை தெரியவில்லை

## Awards

15. Choose the wrong match:

1. Kapil Kapoor – Literature and Education
2. Deepak Dhar – Science and Engineering
3. Lakshman Singh – Literature
4. Vadivel Gopal - Music

a. 1 and 4 are incorrect **b. 3 and 4 are incorrect**

c. 1 and 2 are incorrect

d. 2 and 3 are incorrect e. Answer not known

தவறான இணையை கண்டறிக.

1. கபில் கபூர் - இலக்கியமும், கல்வியும்
2. தீபக் தார் - அறிவியலும், பொறியியலும்
3. லக்ஷ்மன் சிங் - இலக்கியம்
4. வடிவேல் கோபால் - இசை

a. 1 மற்றும் 4 மட்டும் தவறானது **b. 3 மற்றும் 4 மட்டும் தவறானது**

c. 1 மற்றும் 2 மட்டும் தவறானது d. 2 மற்றும் 3 மட்டும் தவறானது

e. விடை தெரியவில்லை

16. Reason and Assertion type:
Assertion (A): Khel Rathna Award – 2024, was also given to Mohammad Shami
Reason (R):This award was awarded by Anurag Thakur, Ministry of Youth ofAffairs and Sports.
**a. (A) is false, R is true**
b. Both (A) and R are true
C. (A) is true, but R is False
d. Both (A) and R are true but (R) is not the correct explanation of (A)
e. Answer not known
கூற்று மற்றும் காரணம் வகை:
கூற்று (A): 2024 கேல் ரத்னா விருது கிரிக்கெட் வீரர் முகமது சமிக்கும் வழங்கப்பட்டது.
காரணம் (R): இந்த விருதினை மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாகூர் வழங்கினார்.
**a. (A) தவறு,(R) சரி**
b. (A) மற்றும் (R) இரண்டும் சரி
c. (A) சரி, ஆனால் (R) தவறு
d. (A) மற்றும் (R) சரியே, ஆனால் (R), (A) க்கு சரியான விளக்கம் இல்லை
e. விடை தெரியவில்லை

## Economics

17. Post Covid-19 ____________ percentage of economic growth increased at constant price in TN
a. 11% **b. 8%** c. 6% d. 5% e. Answer not known
கோவிட் 19-ற்கு பிறகு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையான விலையில் ________ சதவீதம் உயர்ந்துள்ளது.
a. 11% **b. 8%** c. 6% d. 5% e. விடை தெரியவில்லை

# UNIT – II - CURRENT EVENTS

## Latest diary of events

1. Which grouping of the following four democracies is known as the Quadrilateral Security Dialogue or Quad?

**a. India, Australia, U.S.A and Japan** b. India, Russia, U.S.A and Japan
c. India, France, U.S.A and Japan d. India, U.K., U.S.A and Japan
e. Answer not known

பின்வரும் எந்த நான்கு ஜனநாயக நாடுகளின் குழுவானது நாற்கர பாதுகாப்பு உரையாடல் அல்லது குவாட் என அழைக்கப்படுகிறது?

a. இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான்
b. இந்தியா, ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஜப்பான்
c. இந்தியா, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ஜப்பான
d. இந்தியா, யு.கே, யு.எஸ்.ஏ மற்றும் ஜப்பான்
e. விடை தெரியவில்லை

1. During the Russia-Ukraine war, a private military company supported by Russia turned against it. Its name is ____

**a. Wagner Group** b. Navalny Group c. Volkov Group
d. Yulia Group e. Answer not known

ரஷ்யா-உக்ரைன் போரின் போது, ரஷ்யாவின் ஆதரவுடன் ஒரு தனியார் ராணுவ நிறுவனம் அதற்கு எதிராக திரும்பியது. அதன் பெயர் _______.

a. வாக்னர் குழு b. நவல்னி குழு c. வோல்கோவ் குழு
d. யூலியா குழு e. விடை தெரியவில்லை

1. Where was the Petersberg Climate Dialogue 2023 held on climate change from May 2 to 3, 2023?

a. Rajgir, India b. Beijing, China c. Bali, Indonesia
**d. Berlin, Germany** e. Answer not known

மே 2 முதல் 3, 2023 வரை காலநிலை மாற்றம் குறித்த பீட்டர்ஸ்பெர்க் காலநிலை உரையாடல் 2023 எங்கு நடைபெற்றது?

a. ராஜ்கிர், இந்தியா b. பெய்ஜிங், சீனா c. பாலி, இந்தோனேசியா
d. பெர்லின், ஜெர்மனி e. விடை தெரியவில்லை

## Sports

1. In 2023 National Sports award Dhyan Chand Rathna award was presented to two persons in the field of

a. Hockey　b. Cricket　c. Chess

**d. Badminton**　e. Answer not known

2023ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விருதான தியான் சந்த் ரத்னா விருது எந்த துறையில் இருவருக்கு வழங்கப்பட்டது.

a. வளைதடிப் பந்தாட்டம்　b. மட்டைப்பந்து　c. சதுரங்கம்

d. பூப்பந்து　e. விடை தெரியவில்லை

## Welfare orientedGovernment schemes and their utility

1. What is Mission Sakthi 2022?

a. Developing leadership skills among the minority women

**b. An umbrella scheme for the safety, security and empowerment of women**

c. To provide cooking gas connection

d. Women literary mission

e. Answer not known

மிஷன்சக்தி 2022 என்றால் என்ன?

a. சிறுபான்மை பெண்களிடையே தலைமைத்துவ திறன்களை வளர்த்தல்

b. பெண்களின் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தலுக்கான குறிகளின் திட்டம்

c. சமையல் எரிவாயு இணைப்பு வழங்க வேண்டும்

d. பெண்களுக்கான கல்வியறிவு திட்டம்

e. விடை தெரியவில்லை

1. Government of India is presently using JAM trinity as a tool for transferring cash benefits directly to the bank accounts of the genuine beneficiaries. What is the full form of JAM, here?

a. Joint Automated Mechanism　b. Just Accept Mechanism

**c. Jan Dhan, Aadhar and Mobile**　d. Just Arrived Mechanism

e. Answer not known

உண்மையான பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பணப் பலன்களை மாற்றுவதற்கான ஒரு கருவியாக இந்திய அரசு தற்போது JAM ட்ரினிட்டியைப் பயன்படுத்துகிறது. JAM இன் முழு வடிவம் என்ன?

a. கூட்டு தானியங்கி இயந்திரம்　b. பொறிமுறையை ஏற்றுக்கொள்

c. ஜன்தன், ஆதார் மற்றும் மொபைல் d. இப்போது வந்த பொறிமுறை
e. விடை தெரியவில்லை

2. Which of the following welfare programmes of Government of India is particularly focused on promoting financial inclusion?
**a. Pradhan Mantri Jan Dhan Yojana** b. Ayushman Bharat
c. Pradhan Mantri Jan Arogya Yojana d. Start-up India
e. Answer not known
இந்திய அரசாங்கத்தின் பின்வரும் எந்த நலத்திட்டங்கள் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்?
a. பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா b. ஆயுஷ்மான் பாரத்
c. பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா d. ஸ்டார்ட் அப் இந்தியா
e. விடை தெரியவில்லை

## Awards and Honours

2. In 2023, which Indian-American mathematician was honored with the International Prize in Statistics?
**a. C. Radhakrishna Rao** b. Debabrata Basu c. Jayanta Kumar Ghosh
d. K.R. Parthasarathy e. Answer not known
2023 இல், எந்த இந்திய-அமெரிக்க கணிதவியலாளர் சர்வதேச புள்ளியியல் பரிசைப் பெற்றார்?
a. சி. ராதாகிருஷ்ண ராவ் b. தேபப்ரதா பாசு c. ஜெயந்த குமார் கோஷ்
d. கே.ஆர். பார்த்தசாரதி e. விடை தெரியவில்லை

## Geography

2. Which of the following city ranked as the "World's most polluted city in 2023" as per World Air Quality Report – 2023 by IQAir.
a. Tiruchirappalli b. Bengaluru **c. Begusarai**
d. Chandigarh e. Answer not known
IQAir இன் உலக காற்றுத் தர அறிக்கை-2023 இன் படி, பின்வரும் நகரங்களில் எது "2023 இல் உலகின் மிகவும் மாசுபட்ட நகரம்" என்று தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது?
a. திருச்சிராப்பள்ளி b. பெங்களூரு c. பெகுசராய்
d. சண்டிகர் e. விடை தெரியவில்லை

# Polity

1. A five-judge bench of the Supreme Court on March 2nd, 2023 unanimously ruled that a high-power committee consisting of the following members must select the Chief Election Commissioner (CEC) and Election Commissioners (ECs).

   Choose the correct answer.

   **a. Prime Minister, Leader of Opposition in Lok Sabha, Chief Justice of India.**

   b. President, Leader of Opposition in Lok Sabha, Chief Justice of India.

   c. Vice-President, Leader of Opposition in Lok Sabha, Chief Justice of India.

   d. Prime Minister, Chairperson of Rajya Sabha, Chief Justice of India.

   e. Answer not known

   உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, 2023 மார்ச் 2 அன்று, தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) மற்றும் தேர்தல் ஆணையர்களை (ECs) தேர்ந்தெடுக்க பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட உயர் அதிகாரக் குழு ஒருமனதாகத் தீர்ப்பளித்தது. சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:

   a. பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், இந்திய தலைமை நீதிபதி.

   b. குடியரசுத் தலைவர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி

   c. துணைக் குடியரசுத் தலைவர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி.

   d. பிரதமர், ராஜ்யசபா தலைவர், இந்திய தலைமை நீதிபதி.

   e. விடை தெரியவில்லை

# UNIT – II - CURRENT EVENTS

## Latest diary of events

1. A short version of the Quad Summit 2023 (India, Japan, the U.S and Australia) was held in
   **a. Hiroshima** b. New York c. Melbourne
   d. New Delhi e. Answer not known
   குவாட் உச்சிமாநாடு 2023 ன் குறுகிய பதிப்பு (இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா) ____________ ல் நடைபெற்றது.
   a. ஹிரோஷிமா b. நியூயார்க் c. மெல்போர்ன்
   d. புதுடெல்லி e. விடை தெரியவில்லை

## Latest inventions in Science and Technology

2. Which tech company has launched an initiative called 'Al Odyssey' to provide skills in the latest AI technology in India?
   a. Google b. Facebook **c. Microsoft**
   d. Apple e. Answer not known
   எந்த தொழில்நுட்ப நிறுவனம் இந்தியாவில் சமீபத்திய Al தொழில்நுட்பத்தில் திறன்களை வழங்க 'Al Odyssey' எனப்படும் முயற்சியைத் தொடங்கியுள்ளது?
   a. கூகிள் b. முகநூல் c. மைக்ரோசாப்ட்
   d. ஆப்பிள் e. விடை தெரியவில்லை

3. Name the lander sent to moon by ISRO through Chandrayan-3__________
   **a. Vikram** b. Dhruv c. Lunar d. Venus e. Answer not known
   சந்திரயான் -3 மூலம் இஸ்ரோ நிலவுக்கு அனுப்பிய லேண்டரின் பெயர் __________.
   a. விக்ரம் b. துருவ் c. லூனார் d. வீனஸ் e. விடை தெரியவில்லை

## Eminent personalities and places in news

4. Who was the chief guest of India's 75th republic Day Celebration, 2024?
a. Joe Biden (President of USA)
b. Rishi Sunak (Prime Minister of UK)
**c. Emmanuel Macron (President of France)**
d. Olaf Scholz (Chancellor of Gemany)
e. Answer not known
இந்தியாவின் 75வது குடியரசு தின விழா, 2024 இன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டவர் யார்?
a. ஜோ பைடன் (அமெரிக்க அதிபர்)
b. ரிஷி சுனக் (இங்கிலாந்து பிரதமர்)
c. இம்மானுவேல் மேக்ரோன் (பிரான்ஸ் அதிபர்)
d. ஒலோப் ஸ்சோல்ஸ் (ஜெர்மனியின் அதிபர்)
e. விடை தெரியவில்லை

## Awards and Honours

5. Who from India received the Ramon Magsaysay Award in 2023 for his unwavering dedication to the medical profession, commitment to pro-health initiatives and advocacy for people-centered healthcare?
**a. Dr. Ravi Kannan** b. Dr. Meenu Walia c. Dr. Gopal Sharma
d. Prof. (Dr.) Atul Sharma e. Answer not known
இந்தியாவில் இருந்து 2023 ஆம் ஆண்டில் ராமன் மகசேசே விருதை மருத்துவத் தொழிலுக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, சுகாதார சார்பு, முன்முயற்சிகளுக்கான அர்ப்பணிப்பு மற்றும் மக்களை மையமாகக் கொண்ட சுகாதாரத்திற்கான வாதிடுதல் ஆகியவற்றிக்காகப் பெற்றவர் யார்?
a. டாக்டர் ரவி கண்ணன் b. டாக்டர் மீனு வாலியா
c. டாக்டர் கோபால் சர்மா d. பேராசிரியர் (டாக்டர்) அதுல் சர்மா
e. விடை தெரியவில்லை

6. The 2023 recipients of the Physiology or Medicine Nobel Prize are
a. Moungi G. Bawendi and Louis E Brus
**b. Katalin Kariko and Drew Weissman**
c. Alexel I Ekimov
d. Pierre Agostini and Ferenc Krausz
e. Answer not known
2023 ஆம் ஆண்டுக்கான உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்கள்

a. மௌங்கி ஜி பாவெண்டி மற்றும் லூயிஸ் இ புரூஸ்
b. காடலின் கரிகோ மற்றும் ட்ரூவெய்ஸ்மேன்
c. அலெக்ஸ் ஐ எகிமோவ்
d. பியெர்ரே அகோஸ்டினி மற்றும் பிரேன்க் காரஸ்
e. விடை தெரியவில்லை

## Political parties and political system in India

7. Under whose chairmanship, a high-level committee was formed on 'One Nation One Election'?

a. Vice President Shri Jagdeep Dhankhar
b. Judge R. S. Sarkaria
**c. Former President Ramnath Govind**
d. Dr. P. V. Rajamannar
e. Answer not known

யாருடைய தலைமையில்,'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்ற தலைப்பில் உயர்மட்டக் குழு உருவாக்கப்பட்டது?

a. துணைத் தலைவர் ஸ்ரீ ஜக்தீப் தன்கர்
b. நீதிபதி ஆர்.எஸ். சர்க்காரியா
c. முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்
d. டாக்டர். பி.வி. ராஜமன்னார்
e. விடை தெரியவில்லை

## Profile of States

8. Which Indian state recently achieved a significant milestone in renewable energy by surpassing its target of solar power capacity installation?

**a. Gujarat**
b. Rajasthan
c. Tamil Nadu
d. Karnataka
e. Answer not known

எந்த இந்திய மாநிலம் சமீபத்தில் சூரிய ஆற்றல் திறன் நிறுவல் இலக்கை விஞ்சி, புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது?

a. குஜராத்
b. ராஜஸ்தான்
c. தமிழ்நாடு
d. கர்நாடகா
e. விடை தெரியவில்லை